பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 24 ஞாயிற்றுக்கிழமை 10.09.2023 கதிர் 303

# சனல் - 4 காணொளி தொடர்பில் சர்வதேச விசாரணையே அவசியம்

## இங்குள்ளோர் சரிவரமாட்டார்கள் என்கிறார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

சனல்-4 காணொளி தொடர்பில் சர்வதேச விசாரணையே அவசியம் என்றும் இங்குள்ளவர்களிடத்தில் விசாரணை ஒப்படைத்தால் எவ்வித மான பயனும் ஏற்படாது என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர் களைச் சந்தித்தபோது சனல்-4 காணொளி தொடர்பில் கருத்து வெளி யிட்ட அவர், இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததா வது:

சனல்-4 தொலைக்காட்சியில் வெளியிடப்பட்ட காணொளிகளை ஒரே யடியாக நாம் நிராகரிக்க முடியாது. அவற்றில் உண்மை இல்லை என்று நாம் அவற்றை விலக்கி வைக்கவும் முடியாது. அதேநேரம் அந்த காணொ ளிகளை முற்று முழுதாக நம்பி நூற் றுக்குநூறுவீதம் உண்மையானது என்றும் கூற முடியாது. ☞2

## இது ரகசியம் அல்ல!

இது இலங்கை அரச படையினருக்குப் போதாத காலம்போலும் அவர்களின் கடந்த கால நடவடிக்கைகள் காரணமாக பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். ஒரு பக்கத்தில் சனல்-4 இலங்கைத் தரைப் படையினரின் சட்டத்துக்குப் புறபம்பான நடவடிக்கையை மீண்டும் ஒரு தடவை புட்டுப்புட்டுவைத்துள்ளது. மற்றொருபுறத்தில் உயர் நீதிமன்றம் விமானப்படையின் நடவடிக்கைக்கு எதிராக உத்தரவிட்டுள்ளது.

தேசியமக்கள்படைஅரசியல்கூட்டங்களில் பங்கேற்றதன் காரணமாக கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஓய்வு பெற்ற எயார்மார்ஷல் சம்பத் துய்யகொண்டாவின் சிறப்புரிமைகளை உடனடியாக மீட்டுத் தருமாறு அட்டர்னி ஜெனரல் மற்றும் பிரதிவாதி தரப்பினருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அது பற்றிய தகவலைத்தான் இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

துய்யகொண்டாவின் சலுகைகள் ☞2

## ஜனாதிபதிக்கு பொப்பி மலர் அணிவிப்பு



பொப்பி மலர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ☞2

அரசியல் அதிகாரத்தை தக்கவைக்க

# தேசிய புலனாய்வுக் கட்டமைப்பை பலவீனப்படுத்தினர் ராஜபக்ஷக்கள்

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

ராஜபக்ஷக்கள் தமது அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காக சர்வதேச மட்டத்தில் தேசிய புலனாய்வுபிரிவைபலவீனப் படுத்தியுள்ளார்களெனஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரி வித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் முன்னணி யின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இஸ்லாமிய அடிப்படை வாதத்துக்கும்தமக்கும்எவ்வித தொடர்பும் இல்லையென ராஜபக்ஷக்கள் குறிப்பிடுவது சிறுபிள்ளைத்தனமானது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கெடம்பே ரஜமஹா விகாரைக்கு ஒருமுறை சென்று 'தாங்கள் அடிப்படைவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே அந்த அடிப்ப டைவாதம் என்ன? அதன் உறுப்பினர்கள் யார் என்பதை தேசிய ☞2

சனல்-4 காணொளி

# குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரித்தது பாதுகாப்பு அமைச்சு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சியால் சுமத்தப்பட்டுள்ள பொய்யான குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரிப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான காணொளி தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:,

சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆதாரமற்ற, மோசமான குற்றச்சாட்டுகளால் ஏற்படும் எதிர்பாராத செயல்கள் அல்லது விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

பாதுகாப்பு ☞2

# ராஜபக்ஷக்களின் மீது சனல்-4க்கு வன்மமாம்

ராஜபக்ஷக்கள்மீதுசனல்-4தொலைக்காட்சிக்குவன்மம் உள்ளதன் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான காணொளியை அது வெளியிட்டுள்ளது என்று பொது ஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை பாராளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

முல்கரிகலவில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப் பின்போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித் ததாவது:

சனல்-4 தொலைக் காட்சிக்குராஜபக்ஷக்களுடன் பாரம்பரிய கோவம் உள்ளது. குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ மீதுஅந்தத்தொலைக்காட்சிக்கு வன்மம் உள்ளது. உள் நாட்டு போராட்டம் ஆரம்பிக் கப்பட்ட போதும் அது முடிவ டைந்தபோதும் அதனை நாம் பகிரங்கமாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் சம்பவம் தொடர்பாக புலனாய்வு பிரிவினால் தாக்குதல் குறித்த விவரங் கள் முன்கூட்டியே வழங்கப் பட்டபோதும் அப்போதைய ஆளும் தரப்பு அதனைக் கருத்தில் கொண்டு செயல் படவில்லை.

சனல்-4 தொலைக் காட்சி ராஜபக்ஷக்களுக்குச் சறு பூசுவதாக செயற்படு வது ஒருபுறம் இருக்கையில் மறு பக்கத்தில் நாட்டினு டைய புலனாய்வு பிரிவு அதிகாரிகளை குற்றவா ளிகளாக நிறுத்துகிறது. அவர்களின் கௌரவத்தினை சீரழிக்கின்றது.

அது மட்டுமின்றி உயிர்த்த ஞாயிறு தாக்குத லுடன் தொடர்புடையவர்க ளின் தவறுகளை மறைத்து ஒழிந்து கொள்வதற்கும் வழி வகுக்கின்றது - என்றார்.

# ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் அறிக்கை முழு ஏமாற்றம்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்உயர்ஆணையா ளருடையஅறிக்கைஏமாற்றம் அளிப்பதாக தெரிவித்துள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

கொழும்பில் நேற்றை யதினம் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இல் லத்தில் நடைபெற்ற செய்தி யாளர்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட் டுள்ளது. ☞2

# கொக்குத்தொடுவாயில் புலிகளின் இலக்கத்தகடு

### நேற்றைய அகழ்வின்போது மீட்பு

(ந.லோகதயாளன்.)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று விடுதலைப் புலிகளின் இயக்கப் போராளி ஒருவரின் இலகத்தகடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வு தொடந்து 4ஆவது நாளாக இடம்பெறும் நிலையில், போராளிகள் பயன்படுத்திய இ.1334 இலக்கத்தகடே கருத்தில் அணியும் நூலுடன் மீட்கப் பட்டுள்ளது.தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்ட மைப்பில் மாவட்டரீதியிலான நிர்வாகம் இயங்கிய காலத்தில் 'இ' இலக்கத்தகடுவன்னிமாவட்ட நிர்வாகப் போராளிகளிற்கு வழங்கப்பட்டிருந்தது.

# பாதுகாப்பு அமைச்சு அறிக்கையை நிராகரித்தார் கொழும்பு பேராயர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தொடர்பில்சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி முற்றிலும் தவறானது என்று பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை பயனற்றது. வெட்கமற்றது இந்த அறிக்கை.

இவ்வாறு கொழும்பு பேராயர் இல்லத்தின் வெகுஜனதொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் அருட்தந்தை ஜுட் கிரிஷாந்த பெர்ணான்டோ தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று மாலை செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சனல்-4 தொலைக் காட்சியின் காணொளி சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சு ஊடக ☞2

### காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் குறித்து

# கொழும்பில் 4 தூதுவர்களுடன் உறவுகள் நேற்று சந்தித்து பேச்சு





வடக்கு கிழக்கில் இறுதிப் போரின்போது பலவந்தமாகக் காணாமலாக்கப் பட்டவர் களின் உறவினர்களது சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று கொழும்பில் 4 தூதரக அதிகாரிகளைச்சந்தித்துதமது கோரிக்கைகளை எடுத்து விளக்கினர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய ஜெனிவா அமர்வில், தமது கோரிக் கைகளுக்கு உலக நாடு களின் ஆதரவைப் பெற்றுத் தரவேண்டுமென்றுஅவர்கள் இந்த 4 தூதர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்திப்புக் குறித்து ☞2

# போதைப் பொருள் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணையவேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் அறைகூவல்

போதைப்பொருள் பயங் கரவாதத்தை ஒழிக்க நாடாளுமன்றஉறுப்பினர்கள் ஒன்றிணையவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர் களுக்கான நாடாளுமன்ற குழுக்கூட்டம் கூடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் அரசமைப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பிலான அத்தியா யத்தில் சிறுவர் மற்றும் பெண் உரிமைகள் உள்ள டக்கப்படவேண்டும். நாட்டி லுள்ள போதைப்பொருள் ஒழிப்பு அமைப்புகள் நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேருக்கும் அது தொடர்பில் தெரிவிக்கும் செயலமர்வு ஒன்றை நடத்த வேண்டும்.

இது சிக்கலான மற்றும் முக்கியமான தலைப்பு என்பதால் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் உறுதியான ஒரு குரல் தேவையாகவுள்ளது. இது தொடர்பில் சட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தி தொழிற்சங்கங்கள் மற்றும் பாடசாலை மேம்பாட்டுக் கழகங்கள் இணைந்து அதிபர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தெளிவான வேலைத்திட்டம் ஒன்றைச் செயல்படுத்தவேண்டும்.

மதத் தலங்கள், பாட சாலைகள் மற்றும் முன்பள் ளிகளுக்குஅருகாமை யில்உள்ளமதுபானக் ☞2

# வெளிநாட்டவர்களை ஈரக்கும் சுகாதாரக்கொள்கை அவசியம்

### ஜனாதிபதி வலியுறுத்து

வெளிநாட்டு நோயாளர் களை நாட்டுக்குள் ஈர்க்கும் வகையில் மருத்துவ சுற்று லாத்துறை மற்றும் சுகாதார சேவைகள் என்பவற் றை உயர் தரத்தில் முன்னெ டுத்துச் செல்வதற்கு உகந்த, முழுமையான சுகா தாரக் கொள்கை அவசிய மென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அதற்காக அதிகளவில் வைத்தியர்களை உருவாக் குவதற்கு வைத்திய பீடங்களையும் பல்கலைக் கழகங்களையும் தொடங்க வேண்டியதுஅவசியம்என்றும் அவர் வலியுறுத்தினார்.

தனது ஆட்சிக் காலத்தில் நாட்டின் அனைத்துக் குடிமக் களுக்கும்வைத்தியகாப்புறுதி பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

ஜோசப் பிரேசர் வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற நூற்றாண்டு விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவற்றைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜோசப் பிரேசர் வைத்தி யசாலை என்பதைவிட நூற்றாண்டைக் கடந்துள்ள நிறுவனம்என்றுகூறமுடியும். பிரேசர்கள் ஸ்கொட்லாந்தில் உள்ள ஒரு புகழ்பெற்ற தலைமுறையை ☞2

## இனி இது .....

மீண்டும் வழங்கப்படும் என மனுதாரர் மற்றும் அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆகியோருக்கு கடிதம் ஒன்றை வழங்குமாறு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்ய கொண்டா தேசிய மக்கள் படையின் (ஜேவிபி தலைமையிலான கூட்டணி) பல கூட்டங்களில் கலந்து கொண்டதன் காரணமாக விமானப் படையின் ஓய்வூதிய சலுகைகளை பறித்து தம்மை கறுப்புப் பட்டியலில் சேர்க்க விமானப்படைத் தளபதி தீர்மானித்தார். அது தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளியாகின. ஆனால் துய்யகொண்டாவுக்கு அது பற்றி அறிவிக்கப்படவில்லை. என்றாலும் ஊடகச் செய்திகள் மற்றும் நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பண்டார தென்னக்கோன் தெரிவித்த கருத்துக்களை வைத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தனது அடிப்படை உரிமைகளை மீறியதற்காக விமானப் படைத் தளபதியிடம் இருந்த 5 மில்லியன் ரூபா.கேட்டு துய்யகொண்டாவால் இந்த அடிப்படை உரிமை வழக்கு தொடரப்பட்டது.

விமானப்படை தளபதிக்கு மேலதிகமாக விமானப்படை நிர்வாக பணிப்பாளர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன்பா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொண்டா, கடந்த மார்ச் மாதம் தாம் விமானப்படையினரால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப் பட்டதாக ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்டதாகவும், ஆனால் இது தொடர்பில் விமானப்படை இதுவரை தமக்கு அறிவிக்கவில்லை எனவும் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய மக்கள் படை அரசியல் மேடையில் தனது கருத்தை தெரிவித்ததன் விளைவாகவே தன்னை கறுப்புப் பட்டியலில் சேர்க்க நேரிட்டதாக அரச பாதுகாப்பு அமைச்சர் பிரமிதா பண்டார தென்னகோன் நாடாளுமன்றத்தில் தெரிவித்ததாகவும் முறைப் பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

30 வருடங்களுக்கும் மேலாக இந்த நாட்டில் போரை முடிவுக்கு கொண்டு வர விமான ஓட்டியாக சிறந்த பணியை ஆற்றி பல பதக்கங்களை பெற்றவர் தாம் என்றும் மனுதாரர் கூறியிருக்கிறார்.

விமானப்படையில் கடமையாற்றும் காலத்திலோ அல்லது விமானப்படையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரோ எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்ய கொண்டா தெரிவித்துள்ளார். இவ்வாறான நிலையில் விமானப்படையின் ஓய்வுக்கால சலுகைகளைப் பறித்து தம்மை கறுப்புப்பட்டியலில் சேர்த்தமை மிகவும் பிரச்சினைக்குரிய நிலைமை என அவர் சமர்ப்பித்துள்ளதாக முறைப்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது.

நிலையான சட்ட நடைமுறைகளைப்பின்பற்றாமல் ஓய்வுபெற்ற அதிகாரியை கறுப்புப் பட்டியலில் சேர்க்க விமானப்படைத் தளபதி அல்லது அவரது பிரதிநிதி அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை என சம்பத் துய்யகொண்டா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

விமானப்படைத் தளபதியின் தீர்மானத்தை ரத்து செய்யுமாறும், தனது அடிப்படை உரிமைகளைப் பறித்தமைக்காக விமானப் படைத் தளபதியிடமிருந்து 5 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும், சம்பத் துய்ய கொண்டா தனது மனுவில் கேட்டிருந்தார்.

இப்போது அவருக்குச் சார்பாக உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## சனல் - 4....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே குறித்த காணொளி சம்பந்தமாக சர்வதேச விசாரணை ஒன்றை முன்னெடுப்பதே பொருத்தமானதாகும். உள்நாட்டில் உள்ளவர்களிடம் விசாரணை செய்யுமாறு பொறுப்பை ஒப்படைத்தால் அதனால் எந்த விதமான பயணம் கிடைக்கப் போவதில்லை. சர்வதேச விசாரணைதான் பொருத்தமானது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது - என்றார்.

கேள்வி:- அப்படியென்றால் உள்நாட்டில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் வெற்றியடையவில்லை என்றா சொல்கிறீர்கள்?

பதில்:- ஆம் உள்நாட்டில் நடைபெற்ற விசாரணைகள் வெற்றியடைவில்லை.

## கொழும்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு மாவட்டங்களை சேர்ந்த பிரதிநிதிகள் நியூஸ்லாந்து, பிரித்தானியா, நெதர்லாந்து, அவுஸ்ரேலியா தூதரக அதிகாரிகளை சந்தித்தோம்.

எமது உறவுகளுக்கான சர்வதேச நீதி பொறிமுறையினை அவர்களிடம் கேட்டிருந்தோம். அத்துடன் காணாமல்போனோர் அலுவலகம், ரி.ஆர்.சி அலுவலகத்தில் எமக்கு உடன்பாடு ஏன் இல்லை என்பதையும் நாங்கள் தெளிவுபடுத்திஇருக்கின்றோம்

நாங்கள் நீண்ட காலமாகப் போராடி வருவதால் எமக்கான அச்சுறுத்தல்களையும், அடக்குமுறைகளும் எவ்வாறு இருக்கிறது என்ற உண்மை நிலவரத்தையும் எடுத்து கூறியிருந்தோம்

எமக்கான ஒருநீதிப்பொறி முறையை பெற்றுத் தரும்படியும் எமது உறவுகளுக்கு இதுவரையில் நீதி கிடைக்காமையால் ஜெனிவா கூட்டத்தொடரில் எமக்கான ஆதரவினை சகல நாடுகளும் தரவேண்டும் என கோரியிருந்தோம்.

நாங்கள் உரிமைகளை இழந்து இங்கு செயற்படுகின்றோம் எமது உரிமைகளைப் பெறுவதற்கு ஆவனசெய்யவேண்டும் நாம் ஓர் இனமாக வாழ வேண்டும் என்பதற்காக இன்று அவர்களிடம் எமது கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளோம் - என்றனர்.

இந்தச் சந்திப்பில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, அம்பாறை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த உறவுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். மட்டக் களப்பு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவில்லை.

## ஐ.நா. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னா தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது இலங்கை தொடர்பில் கரிசனை கொண்டு 2012 முதல் செயற்படத் தொடங்கியது. இதன் பின்னர் இலங்கை தொடர்பில் பல்வேறு விதமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுவருகின்றன. அவற்றில் குறைபாடுகள் இருந்தாலும் ஓரளவு தமிழ் மக்களின் விவகாரங்களை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தன.

இருப்பினும் ஐ.நா. அறிக்கைகளில் காணப்படுகின்றன குறைபாடுகளை நாங்கள் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டி வந்திருந்தோம். குறிப்பாக, பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள், இலங்கையில் தமிழ்த் தேசியப் பிரச்சினை காணப்படுகின்றது என்பது சுட்டிக்காட்டப்படவில்லை.

அத்துடன், இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்திற்காக பாதிக்கப்பட்ட மக்கள் கோரும் வகையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை முன்நிறுத்துவதற்கு தயராக இல்லாத நிலைமை தான் நீடிக்கின்றது.

மேலும் நிலைமாறுகால நீதிப்பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட காணமலாக் கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம், இழப்பீட்டு அலுவலகத்துக்கான சட்டம் இயற்றப் பட்டமை உள்ளிட்டவற்றை பாதிக்கப்பட்ட மக்கள் மறுதலித்துள்ளார்கள்.

மேற்படி பின்னணியில் தற்பொழுது 54ஆவது கூட்டத்தொடரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ந்த ஆணையாளருடைய எழுத்து மூலமாக அறிக்கை வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. அந்த அறிக்கை எம்மைப் பொறுத்தவரையில் ஏமாற்றம் அளிப்பதாகவே உள்ளது.

2012 இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு அத்திவாரமாக இருந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள், மனிதாபிமாச் சட்ட மீறல் விடயங்கள் காணப்பட்டபோதும் அவை தற்போதைய அறிக்கையில் பத்தோடுபதினொன்றாகவே மாற்றப்பட்டுள்ளது.

பொறுப்புக்கூறல் என்கின்ற விடயம் வலியுறுத்தப் பட்டுள்ள போதும் எம்மைப்பொறுத்தவரையில் அதற்கான முக்கியத்துவம் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வும் ஒற்றையாட்சிக்குள் காணப்படுகின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தினைதிணிக்கச் செய்கின்ற வகையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளமையும் ஏமாற்றமளிக்கின்றது - என்றார்.

## போதைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைகளுக்கு குறிப்பிட்ட தூரம் பேணப்படவேண்டும், எனினும் அந்த தூரம் தற்போது மீறப்பட்டுள்ளது. திஸ்ஸமஹாராமதெபரவெள தேசிய பாடசாலை மற்றும் ஜனாதிபதி பாடசாலைக்கு அருகாமையில் மதுபான சாலை ஒன்று இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த வரம்புகளை உடனடியாக அதிகரித்து பாடசாலை மற்றும் மதத் தலங்களைப் பாதுகாக்க வேண்டும்

சுற்றுலா ஊக்குவிப்பு என்ற பெயரில் பியர் மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக் கப்படுவதுடன், சில அரசியல்வாதிகள் சுற்றுலாப் பகுதிகளைதாண்டி இந்த பியர் மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை ஒதுக்கி வைத்துள்ளனர்.

இந்தச் சபைக்கு சிகரெட், புகையிலை, மதுபான நிறுவனங்களை வரவழைத்து நேருக்கு நேர் பேசி இது தொடர்பில் கடுமையான தீர்மானங்களை எடுப்போம். இதன் மூலம் பாவனையை ஓரளவு குறைக்க முடியும். இதேவேளை, போதைப் பொருள் கடத்தல் தொடர்பிலும் கவனம் செலுத்தப் படவேண்டும்.

சிறைச்சாலைக் குள்ளேயும் வெளியேயும் நடைபெறும் இந்த கடத்தலைத் தடுக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். போரில் வெற்றி பெற்ற நாட்டில் போதைப்பொருள் பயங்கரவாதம் நிறுத்தப்பட வேண்டும். அதற்கான பூரண ஆதரவு வழங்கப்பட வேண்டும் - என்றார்.

## தேசிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வு பிரிவின் பிரதானி சுரேஷ் சலே, கபில ஹெந்த விதாரண, முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

தேசிய தௌஹீத் ஜமாதே அமைப்பு யாருடையது? தேர்தல் காலத்தில் தௌஹீத் அமைப்பு ராஜபக்ஷக்களுக்கு செயற்படவில்லையா? 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு வாக்களிக்குமாறு தௌஹீத் அமைப்பு குறிப்பிடவில்லையா, பௌத்தர்கள் மத்தியில் அடிப்படைவாதம், கருத்தடை தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்தி விட்டு மறுபுறம் தௌஹீத் அமைப்பை தமது அரசியல் நோக்கத்துக்காக பயன்டு படுத்திக் கொள்ளவில்லையா என்பதை ராஜபக்ஷக்கள் நாட்டு மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

இராணுவ புலனாய்வு பிரிவு, தேசிய புலனாய்வு பிரிவு என்பனவற்றின் கவனத்துக்கு அப்பாற்பட்ட வகையில் சஹ்ரான் செயற்பட்டுள்ளான். சர்வதேச மட்டத்தில் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இஸ்லாமிய அடிப்படைவாத செயற்பாடுகள் தீவிரமடைந்த பின்னணியில் 2010 முதல் 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் தௌஹீத் அமைப்பு அரசியல் நோக்கத்துக்காக அரச அனுசரனையுடன் பாதுகாக்கப்பட்டது.

உலகில் எந்த நாட்டு புலனாய்வு பிரிவும் குண்டுதாரியின் வீட்டுக்கு செல்லாது. தாஜ் சமுத்ரா ஹோட்டலில் குண்டுத் தாக்குதலை நடத்தச் சென்ற ஜமீலை புலனாய்வு அதிகாரி ஒருவர் சந்தித்துள்ளார்.

அத்துடன் புலனாய்வு பிரிவின் அதிகாரி ஒருவர் மாத்தளைக்கு சென்று பிறிதொரு அடிப்படை வாதியிடம் இந்த தாக்குதலை இதனை ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதல் என்று ஏற்றுக் கொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளார். உலகில் எந்த நாட்டிலும் இவ்வாறான புலனாய்வு பிரிவு கிடையாது. ஆகவே உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்கூட்டியதாகவே பலவிடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆகவே தற்போது எவரும் தப்பிக்க முடியாது.

குண்டுத் தாக்குதல் தொடர்பில் பலவிடயங்களை வெளிக்கொண்டு வர முயற்சித்த சானி அபேசேகரவை ராஜபக்ஷக்கள் கொல்லாமல் கொன்றார்கள். மனசாட்சியில்லாமல் அவரை நெருக்கடிக்கு உள்ளாக்கினார்கள்.

ஒட்டுமொத்த மக்கள் மத்தியிலும் தேசிய புலனாய்வு பிரிவு தற்போது அபகீர்த்திக்குள்ளாக்கப் பட்டுள்ளது. ராஜபக்ஷ குடும்பம் தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள செய்த விடயங்கள் சர்வதேச மட்டத்தில் பேசப்படுகிறது.

இதனால் தேசிய புலனாய்வு பிரிவு சர்வதேச மட்டத்தில் மலினப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையை திருத்திக் கொள்ளாவிட்டால் ஒட்டுமொத்த மக்களும் நெருக்கடிக்குள்ளாக்கப்படுவார்கள் - என்றார்.

## ஜனாதிபதிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அலுவலகத்தில் பொப்பிமலர் நேற்றையதினம் அணிவிக்கப்பட்டது.

இலங்கை ஓய்வுபெற்ற படையினர் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் உபுல் பெரேராவினால் ஜனாதிபதிக்கு பொப்பி மலர் அணிவிக்கப்பட்டது.

உலகப் போர்களின் போதும் 30 வருடகாலம் இலங்கையில் இடம்பெற்ற போரிலும் உயிர் நீத்த தரைப் படையினரின் நினைவாக இலங்கை ஓய்வுபெற்ற படையினர் சங்கத்தினால் வருடாந்தம் பொப்பி மலர் தினம் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

இந்த பொப்பி மலர் விற்பனையினால் கிடைக்கும் வருமானத்தை கொண்டு இலங்கை ஓய்வு பெற்ற படையினர் சங்கத்துடன் இணைந்து செயற்படுவோருக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. முப்படையிலிருந்து ஓய்வெபற்றோரும் இந்தச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றனர். இவ்வாறான 44 சங்கங்களின் 50 ஆயிரம் உறுப்பினர்களின் நலன்புரிச் செயற்பாடுகள் இந்த நிதி மூலம் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை ஓய்வுபெற்ற படையினர் சங்கத்தின் செயலாளர் லெப்டினன் கேணல் அஜித் சியம்லாபிட்டிய, பொருளாளர் மேஜர் ஜீ.கே.சீ. சாந்திலால் கங்கானம்கே, பொப்பி குழுவின் தலைவர் பிரிகேடியர் ஹேமந்த லியனகே, குழு உறுப்பினர்களான மேஜர் பீ.எச்.வில்டஸ் டி சில்வா, கெப்டன்.டீ.எம்.எச். மடுல்கல்ல, கே.எச்.என்.சந்தி ஹெட்டியராச்சி, ஐ.கே.ஏ. ரோஹனி உள்ளிட்டவர்கள் ஜனாதிபதிக்குப் பொப்பி மலர் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

அதனையடுத்து தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கும் பொப்பி மலர் அணிவிக்கப்பட்டது.

## பாதுகாப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சு வெட்கமற்ற, பயனற்ற அறிக்கை ஒன்றை தற்பொழுது வெளியிட்டுள்ளதாகவே நாம் பார்க்கின்றோம்.

சனல்-4 காணொளியை மறுப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு கூறுவதானது குற்றச்செயலுடன் தொடர்புடையவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு வெள்ளை அடித்துசெயல்படுகின்றதொரு செயற்பாடாகும்.

இது வெட்கப்பட வேண்டியதாகும் சனல்-4 தொலைக்காட்சி மூலமாக வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் எமக்குப் புதியவை அல்ல. அவை ஏற்கனவே நாம் சந்தேகம் கொண்ட விடயங்கள் தான். இப்பொழுது அவை உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றன. பொறுப்பான பாதுகாப்பு அமைச்சு என்றால் குறித்த காணொளி சம்மந்தமாக முழுமையான ஆய்வை செய்து, ஒன்றுக்கு இரண்டுதடவைகள் கவனித்து அதன் பின்னரே ஊடக அறிக்கையை வெளியிட வேண்டும்.

அதேநேரம் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையை அல்லது ஜனாதிபதி விசாரணை குழுவினால் வெளியிடப்பட்டுள்ள விசாரணை அறிக்கையை மக்கள் ஏற்றுக் கொள்வது சம்பந்தமாக தீர்மானம் எடுக்கவேண்டியுள்ளது. ஏனென்றால் பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணைக் குழுவின் அறிக்கை முக்கியமான விடயங்களை குறிப்பிட்டுள்ளது. ஆனால் தற்போது, பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை அதனை நிராகரிக்கின்றது - என்றார்.

## சனல் 4....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு எந்தவொரு நபரினதும் அல்லது நிறுவனத்தினதும் கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கிறது. புலனாய்வுபத்திரிகைத் துறையின் முக்கியத்துவத்தை பறைசாற்றுகிறது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாத எதிர்ப்பு புலனாய்வு பிரிவு மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான தீவிரவாத குழுவின் பொறுப்பை தொடர்ந்து உறுதிப் படுத்தியுள்ளது.

சனல்-4 தொலைக் காட்சியின் ஆவணப்படம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பழியை இராணுவ புலனாய்வுப் பிரிவு மீதும் இலங்கையின் தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே மீதும் அப்பட்டமாக போடுவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

இந்த நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை வழிநடத்தியதாகவும் குண்டுதாரிகளுக்கு ஆதரவளித்ததாகவும் 36 வருடங்களாக நாட்டிற்காக சேவையாற்றிய சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே 2016 டிசெம்பர் மாதத்தில் இருந்து 2018 டிசம்பர் வரை மலேஷியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் அமைச்சின் ஆலோசகராக பணியாற்றியுள்ளார்.

அவர் 2019 ஜனவரி 03 ஆம் திகதி இந்தியா சென்று டெல்லியிலுள்ள தேசிய பாதுகாப்பு கல்லூரியில் கற்கைகளை பூர்த்தி செய்து 2019 நவம்பர் 30 ஆம் திகதி மீண்டும் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

ஆகவே சனல்-4 தொலைக்காட்சியின் ஆவணப்படத்தில் குறிப்பிடப் பட்டுள்ள காலப்பகுதியில் அவர் இலங்கையில் இருக்கவில்லை என்பது முக்கியமான விடயமாகும்.

மேலும் குறித்த காலப் பகுதிக்குள் சுரேஷ் சலே, இலங்கையின் புலனாய்வு மற்றும் பாதுகாப்பு பிரிவுகளில் பணிக்குஅமர்த்தப்படவில்லை அந்த துறைகளில் எவ்வித பொறுப்புகளையோ பதவிகளையோ அவர் வகிக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய எந்தவொரு பயங்கரவாதியும் அரச சம்பளப் பட்டியலில் இல்லை என்பதும் முக்கியமான விடயமாக குறிப்பிட வேண்டியுள்ளது. எனவே, இந்த குற்றச் சாட்டுகளை முழுமையாக நிராகரிப்பதோடு இத்தகைய ஆதாரமற்ற மற்றும் அடிப்படையற்ற தகவலை பரப்பியதற்காக சனல் 4 தொலைக்காட்சிக்கு எமது கடுமையான அதிருப்தியை தெரிவிக்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் பின்னர் அதிகாரத்திற்கு வந்த இலங்கை அரசு, உண்மையை வெளிக்கொணர்வதில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளன.

உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களால் நடத்தப்பட்ட வெளிப்படையான விசாரணைகளுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளதோடு அவுஸ்திரேலிய பெரடல் பொலிஸ் மற்றும் அமெரிக்காவில் உள்ள எப்.பி.ஐ என்பவற்றால் நடத்தப்பட்ட விரிவான விசாரணைகளும் அமெரிக்க நீதித்துறையின் தீர்ப்புகளும் உள்ளூர் விசாரணைகளின் கண்டுபிடிப்புகளை உறுதிப்படுத்தியுள்ளமையை அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டியது அவசியமானதாகும்.

சர்வதேச புலனாய்வு அமைப்பின் இந்த உறுதியான ஒப்புதல் விசாரணைகளின் துல்லியம் மற்றும் நேர்மையை மேலும் உறுதிப் படுத்துவதாக உள்ளது.

தொடர்ச்சியான மற்றும் உண்மையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சனல்-4 இன் தூரநோக்கற்ற மற்றும் மோசமான நடத்தையின் ஊடாக முரண்பாடுகளை விதைப்பதன் மூலம் இலங்கை சமூகத்தின் கட்டமைப்பை சீர்குலைப்பது மாத்திரமன்றி அவர்களின் நேர்மை மற்றும் பொறுப்பை உறுதியுடன் நிலைநிறுத்தியவர்களின் நற்பெயரையும் பாதுகாப்பையும் பாதிக்கிறது - என்றுள்ளது.

## வெளிநாட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர்கள். அங்கிருந்துதான் ஜோசப் பிரேசரும் இலங்கை வந்தார்.

பிரித்தானியர்கள் இலங்கைக்குத் தேயிலை தொழிலை அறிமுகப்படுத்திய காலத்தில் அவர் ஒரு தோட்ட உரிமையாளராக இருந்தார். இலங்கைத் தேயிலைத் தோட்டங்களுக்கு மத்தியில் பிடகந்த தோட்டத்தை மையமாகக் கொண்டு தோட்டத் தொழிலை நடத்திச்சென்றார்.

இறுதியாக அவர் இலங்கையிலேயே உயிர் நீத்தார். ஏனைய தோட்ட உரிமையாளர்களுக்குமாறாக அவரும் அவரது மனைவியாரும் இலங்கையில் ஓர் அடையாளத்தை பதித்துவிட்டு சென்றனர்.

இந்நாட்டுக்கு அவர் சேவையாற்றியுள்ள அதே நேரம் நாட்டை கட்டியெழுப்பவும் பங்களிப்புச் செய்துள்ளார். பெருந்தோட்டத் தொழிலில் இலாபம் ஈட்டிய ஏனைய நூற்றுக்கணக்கான தோட்ட உரிமையாளர்களுக்கு மத்தியில் அவரும் அவரது குடும்பத்தினரும் இந்த நாட்டிற்காக ஜோசப் பிரேசர் வைத்தியச்சாலையைவிட்டுச் சென்றுள்ளனர்.

உண்மையில், இந்த மருத்துவமனை நிறுவப்பட்ட போது, இந்த பகுதி வளர்ச்சியடைந் திருக்கவில்லை. வீடுகளும் அதிகளவில் இருக்கவில்லை என்பதால் அரச ஊழியர்கள் அனைவரையும் இவ்விடத்தில் தங்க வைப்பதற்கான முயற்சிகளும் காணப்பட்டன.

அதேபோல் பொலிஸ் நிலையமொன்றைத் தொடங்கவும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக ஜோசப் பிரேசர் வைத்தியச்சாலை தொடங்கப்பட்டது. அதன் பின்னர் வேறு முயற்சிகள் காணப்படவில்லை. எனது பாட்டனார் பாட்டிக்கு சிரிபா வீதியில் காணியொன்றை வாங்கிக் கொடுத்திருந்தார். அங்கு எனது அம்மா அடிக்கடிச் சென்று வருவதைக் கண்டிருக்கிறேன். 1950 களில் அது வெற்று இடமாக காணப்பட்டது. இந்த வீதியில் இரண்டு அல்லது மூன்று வீடுகளை மாத்திரமே காணக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறானதொரு வைத்தியசாலை தமக்கு இல்லாததையிட்டு ஆண்கள் பொறாமை கொள்வர். ஆண்களுக்கு இவ்வாறானதொரு வைத்தியசாலை இதுவரையில் கிடைக்கவில்லை. மறுமுனையில் அது பெண்களுக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரிய வாய்ப்பு என்பதோடு, நானும் நோயாளர்களைப் பார்க்க பல தடவைகள் இந்த வைத்தியசாலைக்குச் சென்றுள்ளேன். எவ்வாறாயினும் இவ்வாறானதொரு வைத்தியசாலை எமக்குகிடைத்திருப்பதையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

இந்தநிறுவனம் நன்றாகப் பராமரிக்கப்படவேண்டும். இதை ஏற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலையின் தலைவர் சுமலைவிட பொருத்தமான எவரும் இருக்க முடியாது. ஜோசப் பிரேசர் வைத்தியசாலை தொடங்கப்பட்டது முதல் இதுவரையில் சிறந்த முறையில் பராமரித்து வருகிறார். நம்மிடம் உள்ள வளங்களை கொண்டு என்ன செய்ய முடியும் என்பதற்கு அவர் சிறந்த உதாரணமாவார்.

இலங்கையில் உள்ள இவ்வாறான வைத்தியசாலைகள் எதிர்காலத்தில் இலங்கையர்களுக்கு மட்டுமன்றி வெளிநாட்டினருக்கும் தேவையான சேவைகளை வழங்க முடியும். இதன் வடிவமைப்பைப் பார்க்கும் போது, இது ஹோட்டலா, வைத்தியசாலையா என்று கேள்வி எழும்.

நீங்கள் இங்கு வந்து பார்க்கும் போது நோயாளர்களை பார்க்க வந்திருக்கிறோமா, வார இறுதி விடுமுறையை கழிக்க வந்திருக்கிறோமா என்ற கேள்வி ஏற்படும். வைத்தியசாலையில் சேவைகள் இவ்வகையிலேயே உயர் தரத்தில் காணப்படவேண்டும்.

இந்நாட்டுக்கு வெளிநாட்டுநோயாளர்களை மருத்துவ தேவைக்காக வரவழைப்பதற்கு மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் சுகாதார சேவைகள் என்பன உயர் தரத்தில் காணப்படவேண்டும். அவ்வாறான சேவைக்கு

தொடர்ச்சி 9ம் பக்கம்...

# இலங்கைத் தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் விசேட நடவடிக்கை

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் துரிதமாகப் பகிர்ந்து கொள்ளும் வகையில், டிஜிற்றல் முறைமையொன்றை அறிமுகப் படுத்தவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுதர்மா நெத்திகுமார வீட்டில் பணிப்பெண்ணாக இருந்து, பொலிஸ் காவலில் உயிரழந்த ராஜகுமாரியின் மரணம் தொடர்பாக தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

நாமும் இந்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளோம். எவ்வாறாயினும், இன்னமும் இந்த மரணம் தொடர்பாக இறுதி அறிக்கை கிடைக்கப்பெறவில்லை. மேலும், சிங்கப்பூரில் உயிரிழந்த பெண் தொடர்பாகவும் நாம் அந்நாட்டிலுள்ள தூதரகத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வெளிநாடுகளில் தொழில்புரிவோருக்கான காப்புறுதிகளை வழங்கும் திட்டமொன்றைத் தற்போது கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளோம். கொரோனா காலகட்டத்தின்போது வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் உள்ள ஊழியர்கள் நாட்டுக்கு அழைக்கப்பட்டார்கள்.

தற்போது அங்கு வெற்றிடங்கள் காணப்பட்டாலும், நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளால் புதிய ஊழியர்களை நியமிக்க முடியாமல் உள்ளது. தூதரகங்களில் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதால், வெளிநாடுகளில் வேலைசெய்வோரின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய முடியாத ஒரு சூழல் காணப்படுகிறது.

இதனால்தான் டிஜிற்றல் முறைமையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வெளிநாடுகளில் வேலைசெய்வோர் தங்களின் அனைத்து விடயங்களையும் தூதகரங்களுக்கும், கொழும்புக்கும், தங்களின் குடும்பத்துக்கும் இதன் ஊடாக அறிவிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார். (05)

# முருங்கைக்காய் விலை வீழ்ச்சி விவசாயிகள் பலர் கடும் பாதிப்பு

குறைந்த விலைக்கு முருங்கைக்காய் கொள்வனவு செய்யப்படுவதால் பயிர்ச் செய்கையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

35 முதல் 40 ரூபாவுக்கு முருங்கைக்காய் கொள்வனவு செய்யப்படுவதால் உரிய விலை இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்கையாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு, மயில்வாகனபுரம் பகுதியில் முருங்கைச் செய்கையில் அதிகளவான விவசாயிகள் ஈடுபடுகின்றனர்.

குறித்த பிரதேசம் முருங்கை மாதிரி கிராமமாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளதுடன், இக் கிராமத்தில் பலர் முருங்கை செய்கையை பல வருட காலமாக மேற் கொண்டு வருகின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு 700 ரூபா முதல் 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் கிலோ ஒன்றின் விலை தற்பொழுது 35 ரூபா தொடக்கம் 40 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுவதாக விவசா-யிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக பல விவசாயிகள் தமது தோட்டத்தில் உள்ள முருகக்காயை விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளனர் எனவும், இதன் காரணமாக இடைத்தரகர்கள் அதிக இலாபம் பெறுகின்றனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படும் முருங்கைக்காயானது ஒரு கிலோ 250 தொடக்கம் 300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

இருப்பினும் தோட்டச் செய்கையாளர்களிடம் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்ய முற்படுவதுடன், பல மாத காலமாக வெயில் மழை பாராது அயராது உழைத்து பசளை கிருமிநாசினி என பல ஆயிரக்கணக்கான ரூபாவை செலவழித்து முருங்கை செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் தற்பொழுது அறுவடை செய்த முருங்கைக்காயை விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

இந்நிலை தொடருமாயின் இனிவரும் காலங்களில் முருங்கை செய்கையில் இருந்து விடுபட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் கவலை வெளியிடுகின்றனர்.

அனைத்து உற்பத்திகளுக்கும் அரசாங்கம் நியாய விலை என கூறி வரும் நிலையில் தமது மரக்கறி உற்பத்திகளுக்கு மாத்திரம் உரிய விலை இன்றி அல்லலுறுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தம்மிடம் உள்ள முருங்கைக்காயை ஒரு கிலோ நூறு ரூபாவுக்கு மேல்தான் கொடுக்க முடியும் எனவும், அந்த விலைக்காவது தம்மிடம் உள்ள முருங்கைக்காயை கொள்வனவு செய்ய முன் வருமாறும் முருங்கை செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (05)

# தொல்லியல் பணிப்பாளர் நாயகம் பதவியை உடனடியாக நீக்குங்கள்

## ஈ.பி.டி.பி. கோரிக்கை

''தேசிய நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிப்பவரும், நீதிமன்ற தீர்ப்புக்களை மதிக்காதவருமான தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை உடனடியாக பதவி நீக்க வேண்டும்' என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஊடகப் பேச்சாளர், ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மைக்காலமாக சில அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவை நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் தெரிவிக்கப்படுகின்றன. அவை மிக மோசமான நிலைமைகளை ஏற்படுத்தும். அதனால் அவர்கள் அவ்வாறான கருத்துக்களைத் தெரிவிப்பதை நிறுத்த வேண்டும்.

அத்துடன் தொல்லியல் திணைக்கள பணிப்பாளரின் செயற்பாடு நல்லிணக்கத்துக்கு குந்தகம் ஏற்படுத்துகின்றமை மட்டுமல்ல, நீதித்துறையை மதிக்காத செயற்பாடாகவும் உள்ளது. இது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். அதனால் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும். இல்லாவிடின், ஜனாதிபதி தேசிய நல்லிணக்கத்தைப் பேணிக் காக்க இவ்வாறானவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரை உடன் அமுலுக்கு வரும் வகையில் பதவி நீக்க வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# கணிதப் பிரிவில் சிறந்த சித்தி பெற்ற மாணவன் மாரடைப்பால் திடீர் சாவு



கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் (2022ஆம் கல்வி யாண்டு) அடிப்படையில் கணிதப்பிரிவில் சிறந்த சித்தியைப் பெற்ற மாணவன் மாரடைப்பால் உயிரிழந்த சோகமான சம்பவமொன்று வல்லவ பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளது.

வல்லவ பொலிஸ் பிரிவுக் குட்பட்ட தோராய ரணவன பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய ஆர்.ஜி.மனுஜய ஹன்ஸ்மல் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வியாழக்கிழமை இரவு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த நிலையிலேயே குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த மாணவன் இரண்டாவது முறையாக கணிதப் பிரிவில் உயர்தர பரீட்சையில் தோற்றியிருந்ததோடு, அதில் மூன்று 'பி' சித்திகளுடன் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளார்.

அவர் பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் மக்கள் வங்கியின் குருநாகல் மல்லவப்பிட்டிய கிளையில் தற்காலிகமாக பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# அமைச்சுப் பதவியில்லாமல் அரச இல்லத்தில் வசிக்கின்றமை வெட்கமடையும் செயற்பாடு

## மனுஷ நாணயக்கார சாட்டை



அமைச்சு பதவி ஏதும் வகிக்காத நிலையில் அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் வாழ்வது ஒட்டுமொத்த மக்களின் சிறப்புரிமையையும் மீறும் செயற்பாடாகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரனையுடன் தொடர்ந்து அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் வாழ்வது வெட்கமடைய வேண்டியதொரு செயற்பாடு என வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து மே 09 சம்பவத்தால் எனது வீடு தீக்கிரையாக்கப்பட்டது.

அப்போது நான் சுகாதார அமைச்சராக பதவி வகித்தேன். கொழும்பு 07 உள்ள அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் வசித்தேன். பதவி விலகியதன் பின்னர் எனக்கு நீதி கிடைக்கும் வரை அந்த வீட்டில் வசிப்பதற்கு அனுமதி வழங்குமாறு உரிய தரப்பினரிடம் வலியுறுத்தினேன்.

அமைச்சு பதவியில் இருந்து விலகியதன் பின்னர் தொடர்ந்து அரச உத்தியோகப்பூர்வ இல்லத்தில் வசிப்பது தொடர்பில் பல்வேறு தரப்பினர் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால் இவ்விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

அதற்கமையவாகவே நான் அந்த இல்லத்தில் வசிக்கிறேன். இவ்விடயம் தொடர்பில் பல்வேறு தரப்பினர் பொய்யான கருத்துக்களை தெரிவித்துள்ளதால் எனது கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. -என்றார். இதனை தொடர்ந்து எழுந்து உரையாற்றிய அமைச்சர் மனுஷ நாணயக்கார, அமைச்சர் அல்லது இராஜாங்க அமைச்சர் ஒருவர் பதவி வகிக்கும் போது மாத்திரமே அரச உத்தியோகப்பூர்வ இல்லத்தில் வசிக்க முடியும். பதவி விலகியதன் பின்னர் தொடர்ந்து அரச உத்தியோகப்பூர்வ இல்லத்தில் வசிக்க முடியாது. அமைச்சு பதவி வகிக்காத நிலையில் அரச இல்லத்தில் வசிப்பது ஒட்டுமொத்த மக்களின் சிறப்புரிமையை மீறும் ஒரு செயற்படாகும். இது வெட்கப்பட வேண்டியதொரு செயற்பாடாகும். -என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன, தவறான விடயங்களை குறிப்பிட வேண்டாம். மே 09 ஆம் திகதி ஆளும் தரப்பினரது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட போது எனது வீடும் தீக்கிரையாக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நட்ட ஈடு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது நான் அரசாங்கத்தில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட்டதால் எனக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கை இழுத்தடிக்கப்பட்டது. இதற்கு எதிராகவே நான் மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாடினேன். -என்றார். இதன்போது மீண்டும் எழுந்து உரையாற்றிய அமைச்சர் மனுஷ நாணயக்கார பைத்தியம் கலக்கமடைந்தால் வைத்தியர்கள் கலக்கமடைவதில்லை என்று குறிப்பிடுவார்கள். இவரை வைத்தியர் என்கிறார்கள். ஆனால் இவர் ஒரு பைத்தியம், அதனால் தான் தொப்பியை எடுத்து போட்டுக் கொள்கிறார். என்றார். இதன்போது மீண்டும் உரையாற்றிய சன்ன ஜயசுமன, மனித குலம் மூளையை முறையாக பாவித்து செயற்பட வேண்டும். அறிவை பயன்படுத்த முடியாதவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கின்றமை எமது தவறு அல்ல. - என்றார். (05)

# பொன் விழாவினைக் கொண்டாடும் வல்வை மகளிர் மகா வித்தியாலயம்

யாழ், வடமராட்சி வல்வை மகளிர் மகா வித்தியாலயம் தனது பொன்விழாவைக் கொண்டாடி வருகின்றது. இதன் ஒரு பகுதியாக வெள்ளிக்கிழமை காலை மாணவிகளின் சைக்கிள் பவனியும், நடைபவ-னியும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவிகள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அயல் பாடசாலைகளான அப்பா பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி ஆகிய பாடசாலைகள், மாணவிகளுக்கு அமோக வரவேற்பளித்து நீராகரம் வழங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)

# தேசிய மாணவர் படையணியின் பயிற்சிகளுக்கு முல்லை முகாம்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் கையளிப்பு




முல்லைத்தீவில் இராணுவம் இதுவரை பயன்படுத்திவந்த பயிற்சி நிலையத்தை தேசிய மாணவர் படையணிப் பிரிவின் பயிற்சிகளுக்காக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோனிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 59ஆவது படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் டி.கே.ஏ.கே. தொலகே மற்றும் தேசிய பணிப்பாளர் பிரிகேடியர் ஜி.எஸ். பொன்சேகா ஆகியோர் முன்னிலையில், முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.கே. ஜயவர்தன, இராணுவத் தளபதியின் பிரதிநிதியாக கடேட் படையணி 59 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த காலாட்படை பட்டாலியன் பயிற்சி நிலைய வசதிகள் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டன.

142 ஆண்டுகால பெருமைமிக்க வரலாற்றைக் கொண்டு, நாட்டின் எதிர்காலத் தலைவர்களை உருவாக்க பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி-யளிக்கும் ஒரே நிறுவனம் ரன்டம்பே தேசிய கேடட் கார்ப்ஸ் பயிற்சி மையம் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தற்கொலைகளைத் தடுப்போம்

**போருக்குப் பின்னரான காலத்தில் தமிழ்ச் சமூகம் அதிகம் அக்கறை செலுத்தவேண்டிய முக்கியமானவற்றுள் ஒன்று தற்கொலைகள். நாளாந்தம் ஒன்றுக்கும் மேற்பட்ட தற்கொலைகள் பற்றிய செய்திகளை வெகுசன ஊடகங்களில் காணக்கூடிய அளவிற்குத் தமிழர்கள் மத்தியில் தற்கொலைகள் மலிந்துள்ளன. மிகச் சுலபமாகக் கடந்து சென்றுவிடக்கூடிய பிரச்சினைகள் பலவற்றிற்கும்கூட உணர்ச்சிவசப்பட்டு, அவசரப்பட்டு தற்கொலை செய்துகொள்வோர் பலருளர்.**

**தற்கொலை என்பது ஒரு சிக்கலான பிரச்சினை, இதற்கு ஒரே காரணமோ அல்லது குறிப்பிட்ட சில காரணங்களோ மட்டும்இல்லை. இது உயிரியல், உளவியல், சமூக, பண்பாட்டு மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளின் சிக்கலான தொடர்புகளின் விளைவாகும். தற்கொலைக்கு இன, வர்க்க வேறுபாடுகள் கிடையாது. இருப்பினும், தற்கொலைகளைத் தடுக்க முடியும். தற்கொலையைத் தடுப்பது அனைவரின் பொறுப்புமாகும்.**

**உலக தற்கொலை தடுப்பு நாள் இன்று. புரட்டாதி 10, இரவு 8 மணிக்கு, தற்கொலையால் இழந்தவர்களின் நினைவைப் போற்றும் வகையில், இருளை மெழுகுவர்த்தியால் ஒளிரச் செய்ய ஒன்றுகூடும் நிகழ்வு நடத்தப்படுகின்றது.**

**இலங்கையில் நாளொன்றுக்குச் சராசரியாக எட்டு அல்லது ஒன்பது தற்கொலைகள் நிகழ்கின்றன. ஆண்டொன்றுக்கு 3 ஆயிரம் தற்கொலைகள் பதிவாகின்றன. அதாவது இலங்கையில் உள்ள ஒரு லட்சம் பேருக்கு 17 பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர்.**

**1995 இந்த எண்ணிக்கை உச்சத்தைத் தொட்டது. ஒரு லட்சம் பேருக்கு 47 பேர் தற்கொலை செய்துகொண்டனர். அதன் பின்னர் அந்த எண்ணிக்கை குறைந்து வந்துள்ளது. கிட்டத்தட்ட அது ஒரு லட்சம் பேருக்குப் 14 என்ற அளவை எட்டியது. ஆனால், கடந்த சில வருடங்களாக அது மீண்டும் அதிகரித்து 17 என்ற அளவை அடைந்துள்ளது.**

**இந்தச் சந்தர்ப்பத்தில், தற்கொலை என்ற கொடூரமான தலைப்பைச் சூழ்ந்துள்ள மௌனத்தின் திரையை உடைக்கத் துணிந்து, நம் மனதை ஆட்டிப்படைக்கும் நிழல்களை எதிர்கொள்வது மிக முக்கியமானது. தற்கொலை என்பது நம் ஒவ்வொருவரையும் நம் வாழ்வின் ஒரு கட்டத்தில் தொடும் ஒரு உணர்வு, இருப்பினும், அதை வெளிப்படையாக விவாதிப்பது ஒரு சவாலாகவே உள்ளது. ஆயினும்கூட, தற்கொலை, அதன் தோற்றம், பரவல், ஆபத்து காரணிகள் மற்றும் நெருக்கடியில் உள்ளவர்களின் அனுபவங்களை ஆராய்வது பற்றிய தொடர்ச்சியான உரையாடல்களில் ஈடுபடுவது, அதன் நிகழ்வைத் தடுக்க மிகப்பெரிய வாய்ப்பை வழங்குகிறது.**

**தற்கொலை எண்ணங்களுக்குப் பின்னால் உள்ள காரணங்கள் வேறுபடலாம், சிலபுரிந்துகொள்ளக்கூடியவை, மற்றவைசிக்கலானவை, மனச்சோர்வினால் நெருக்கடியில் உள்ள தனிநபர்கள் அனுபவிக்கும் உணர்ச்சி மிகு போராட்டங்கள் அவர்களைத் திடீர் முடிவுகளுக்குத் தூண்டலாம். பல சமயங்களில் அவை தடுக்கப்படக்கூடியவை என்பதுதான் கவலைக்குரியது. தற்கொலைகளைத் தவிர்ப்பதில் அரசும் சமூக நிறுவனங்களும் கூடுதல் அக்கறை செலுத்துவது மிக மிக முக்கியம்.**

**தற்கொலைகளைத் தடுப்பதில் பூச்சகொல்லிகளை தடை செய்வதும் மிக முக்கியமான வழிமுறையாகக் காணப்படுகின்றது. பூச்சிசொல்லிகள் தடைசெய்யப்பட்ட நாடுகளில் தற்கொலைகளின் விகிதம் குறைவாக இருப்பதாக ஐ.நா. ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன.**

**மேலும், பரபரப்பான தற்கொலை செய்திகளை ஊடகங்கள் தவிர்க்க வேண்டியதும் அவசியம். தற்கொலைகள் நிகழ்ந்த முறைகளை ஊடகங்கள் விவரிக்கும்போது அது தற்கொலை எண்ணத்தைக் கொண்டவருக்கு வழிகாட்டுவதாக அமைந்துவிடுகின்றது. எனவே தற்கொலைகள் தொடர்பான செய்திகளை அறிக்கையிடுவது குறித்து ஊடகங்கள் மீளாய்வு செய்வது அவசியம். இந்தத் தற்கொலை அறிக்கையிடல்கள் பலருக்கு பிரச்சினைகளுக்கான தீர்வாக அதனை இனங்காட்டுகின்றன என்று உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

**அதற்குப் பதில் தற்கொலையின் சிக்கலான தன்மையைப் பற்றிய பொதுப் புரிதலை ஊக்குவித்தல் முக்கியமானது. சில இடங்களை தற்கொலைக்கான முக்கிய இடங்கள் (ஹாட் ஸ்பாட்கள்) என்று முத்திரை குத்துவதையும் நாம் தவிர்க்கவேண்டும். மிக முக்கியமாக, தற்கொலை எண்ணங்களுடன் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கு ஆதரவை வழங்குவதற்கும் சாத்தியமான துயரங்களைத் தடுப்பதற்கும் உதவி வழங்குபவர்கள் குறித்த தகவல்களை எப்போதும் வெளிப்படுத்துவுத அவசியம்.**

**பெரும்பாலும், தற்கொலை செய்து கொள்ளும் ஒரு நபர் தனது பிரச்சினையில் தனிமைப்படுத்தப்பட்டதாகவும் தனியாகவும் உணர்கிறார், இது அவருக்குச் சமாளிக்கும் திறனைத் தாண்டியதாகத் தோன்றுகிறது. மக்கள் தங்கள் வலியைச் சமாளிக்கும் திறன் தங்கள் வளங்களைவிட அதிகமாக இருக்கும்போது தற்கொலை பற்றி சிந்திக்கிறார்கள். இதுபோன்ற சமயங்களில், அவர்களின் மன அழுத்த சூழ்நிலையை சமாளிப்பதற்கு அவருக்கு உதவி தேவை. நியாயமற்ற, ஏற்றுக்கொள்ளும், புரிந்துகொள்ளும் மற்றும் அக்கறையுள்ள நபருடன் பேசுவது, சூழ்நிலையின் மீது வித்தியாசமான வெளிச்சத்தை எறிந்து தற்கொலைத் தூண்டுதலை தடுக்க உதவும்.**

**எனவே தற்கொலைகளைத் தடுப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் இன்றைய நாளில் உறுதியேற்றுக்கொள்வது முக்கியம்.**

# பணவீக்கம்; யதார்த்தம் என்ன?

**மனீா டுலவே**



மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்கள் பணவீக்கம் குறைவதாகக்கூறினாலும், யதார்த்தம் அதற்கு மாறாக இருக்கின்றது. பொது மக்களின் வாழ்க்கை வேகமாக மோசமடைந்து வருகிறது.

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து நிலவும் வறட்சி நிலைமையை மோசமாக்கியுள்ளது, ஓகஸ்ட் 22 நிலவரப்படி வறட்சியால் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் 51,055.19 ஏக்கராக அதிகரித்துள்ளது என்று விவசாய அமைச்சகம் அறிவித்தது.

மேலும் விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை ஏனைய பயிர்களின் சேதத்தின் அளவு 424.70 ஏக்கர் எனவும், நெல் மற்றும் ஏனைய பயிர்களின் சேதம் மொத்தமாக 51,479.89 ஏக்கர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு மத்தியில், வியாழக்கிழமை (31) நிலவரப்படி, 19 மாவட்டங்களில் கிட்டத்தட்ட 90,000 குடும்பங்கள் தற்போது நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக குடிதண்ணீர்ப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் (DMC) தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் வரட்சியினால் 19 மாவட்டங்களில் 306,934 நபர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மைய நிலையம் தெரிவிக்கின்றது.

### அடமானம் வைத்தல்

மக்கள் தங்கள் உடைமைகளை அடமானம் வைப்பது அதிகரித்து வருவ தென்பது களநிலவரம் மோசமடைவதற்கான குறிப்பிடத்தக்க அறிகுறி என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளி விவரவியல் துறை பேராசிரியர் வசந்த அத்துகோரள சுட்டிக்காட்டினார். கடந்த ஆண்டு அடகு வைக்கப்பட்ட தங்கத்தின் மொத்த திரட்டப்பட்ட மதிப்பு சுமார் ரூ. 250 பில்லியன். இந்த எண்ணிக்கை 2023 நடுப்பகுதியில் 650 பில்லியன் ரூபாய் என்று அவர் கூறினார்.

நாட்டிலுள்ள மக்களுக்கு வேறு வருமான ஆதாரங்கள் இல்லை என்பதையும், பணவீக்கம் காரணமாக அவர்களின் வருமானத்தின் மதிப்பு வெகுவாகக் குறைந்துள்ளது என்பதையும் இது தெளிவாகக் காட்டுகிறது. முன்னதாக, அவர்கள் அவசர தேவைகளுக்காக இதுபோன்ற உடைமைகளைப் பயன்படுத்தினர். சமீபகாலமாக, தங்கள் அன்றாட நுகர்வுச் செலவுகளைச் சந்திக்கவும், தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கவும், சுகாதாரச் செலவுகளை ஈடுகட்டவும், விவசாயப் பணிகளுக்காகவும்கூட இவற்றை வங்கிகளிலோ அல்லது பிற இடங்களிலோ வைத்து கடன் வாங்குகின்றனர்.

அந்தநேரத்தில், சில மாதங்களுக்கு முன்னர் வரைக்கும் வட்டி விகிதம் மிக அதிகமாக இருந்தது. இன்று வட்டி விகிதம் கொஞ்சம் குறைவாக உள்ளது. அதை சுமார் 18% இல் பராமரிக்க அரசு விதிமுறைகளைக் கொண்டுள்ளது. ஆனால் நெருக்கடி தீவிரமாக இருந்த நேரத்தில் அது சுமார் 25 - 30% ஆக இருந்தது. இது மக்களின் சுமையை மேலும் அதிகரித்தது.

“விவசாயத்துறையில் இருப்பவர்கள் அடகு வைத்து பணத்தின் மூலம் விவசாயம் செய்து வருமானம் கிடைத்ததும் நகைகளை மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் இருந்தனர். ஆனால், வறட்சி மற்றும் ஏனைய காரணங்களால் அவர்கள் தோற்றுவிட்டனர். அதனால் அவர்களால் நகைகளை மீட்கமுடியவில்லை. அதற்கான விருப்பமும் அவர்களிடம் இல்லாமல் போய்விட்டது” என்று பேராசிரியர் அத்துகோரள குறிப்பிட்டார்.

மக்கள் தங்கம் மற்றும் காணிகளை அடமானம் வைப்பதற்கு என்ன காரணம் என்று விளக்கிய பேராசிரியர் அத்துகோரள, பெரும்பாலான காணிகள் மற்றும் சொத்துக்களின் பெறுமதி வேகமாகக் குறைந்துள்ளது. பலர் தங்கள் சொத்துக்களை மாற்ற விரும்புவதால், தங்கள் நிலத்தை விற்று அல்லது அடமானம் வைத்துப் பணம் பெற முயற்சிக்கின்றனர். சொத்துக்களை பணமாக மாற்றும் இந்த செயல்முறை நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் எல்லா நாடுகளில் பொதுவானது.

இரண்டாவதாக, பல இலங்கையர்கள் புலம்பெயர்ந்து வருகின்றனர். அதற்கு அவர்களுக்கு நிதி தேவைப்படுகின்றது. அதனால் தங்களிடம் உள்ள நிலத்தை விற்றுவிடுகிறார்கள் அல்லது சொத்தை அடமானம் வைத்துவிட்டு வெளிநாடு செல்கிறார்கள்.

எனவே, நிலத்தை விற்பனை செய்வது வெறும் நுகர்வு நோக்கங்களுக்காக அல்ல, மாறாக இடம்பெயர்வு போன்ற பிற நோக்கங்களுக்காகவும் இடம்பெறுகின்றது. 2022 தங்களிடம் அடமானம் வைப்பதற்கான தங்கம் இல்லை என்றும், அதற்குள் தங்களிடம் இருந்ததை அடகு வைத்து விட்டனர் எனவும் பெருந்தோட்டத்துறையில் உள்ளவர்கள் தனது ஆய்வில் பகிர்ந்து கொண்டனர் என்று பேராசிரியர் அத்துகோரள குறிப்பிட்டார். 2023க்குள், இந்த ஏழைப் பிரிவினரிடம் அடகு வைக்கக்கூடத் தங்கம் இல்லை. ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையைக் கொண்ட நடுத்தர வர்க்கத்தினருக்கு பணவீக்கம் மற்றும் பிற சிக்கல்களால் இந்த வாழ்க்கை முறையைத் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, அவர்கள் தங்கள் சொத்துக்களை பணமாக மாற்றி, தங்கள் வாழ்க்கை முறையைப் பராமரிக்க முற்படுகிறார்கள்.

பேராசிரியர் அத்துகோரலவின் கூற்றுப்படி, 2023 இல் நடுத்தர வர்க்கம் இந்த நிலைமைக்கு முதல் பலியாகி விட்டது. இது பல்வேறு அரச கொள்கைகள் மற்றும் பணவீக்கம் அதிகரிப்பு மற்றும் வட்டி விகிதங்களின் வியத்தகு அதிகரிப்பு ஆகியவற்றால் ஏற்படுகிறது என்று அவர் நம்புகிறார்,

நீண்டகாலப் பயிர்கள் அல்லது பெருந் தோட்டத் துறையில் வறட்சியின் தாக்கத்தை மதிப்பிடாததால், அரச புள்ளிவிவரங்கள் பணவீக்கத்தின் ஒரு பகுதியை மட்டுமே காட்டுகின்றன என்றும் வறட்சி குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### இரட்டைப் பிரச்சினைகள்

இந்தப் பின்னணியில், தற்போதைய பிரச்சினைகளில் நாடு நீண்டகால தாக்கங்களை எதிர்கொள்ளத் தயாராக இல்லை என்று பேராசிரியர் அத்துகோரல தெரிவித்தார். எனது கணிப்பீடுகளின்படி, பொருளாதாரத்தின் திசையை மாற்ற அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை; நாங்கள் முன்பு இருந்த அதே திசையிலேயே இப்போதும் செல்கிறோம். எங்களுக்கு பொருளாதாரத்தில் இரட்டை கட்டமைப்பு சிக்கல்கள் உள்ளன. ஒன்று பட்ஜெட் பற்றாக்குறை; பட்ஜெட் பற்றாக்குறையை குறைக்க, வருவாயை அதிகரிக்க வேண்டும் மற்றும் செலவைக் குறைக்கவேண்டும். 2022 மற்றும் 2023 தொடக்க ஆறு மாதங்களை ஒப்பிடும்போது, நமது வருமானம் 43% அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், நமது தொடர் செலவு 48% அதிகரித்துள்ளது (மூலதனச் செலவு 7% குறைந்துள்ளது, அதுவும் நல்லதல்ல).

மீண்டெழும் செலவினத்தில் பெருமளவில் அதிகரிப்பு எதுவுமில்லை. அது பொருளாதாரத்தைப் பேணுவதற்கு அவசியமான செலவு. பிரச்சினை என்னவென்றால் மீண்டுவரும் செலவினத்தைவிட வருமானத்தைவிட இப்போதும் அதிகமாக இருப்பதுதான். முன்னர், அதிகளவில் கடன்களைப் பெற்றதால்தான் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையும் அதிகமாக இருந்தது. இப்போதும் அதுதான் மீண்டும் நடக்கிறது. வருமானத்தைவிட செலவுகள்தான் அதிகரித்துள்ளன.

இதன் விளைவாக, கடந்த மாதத்திற்குள் மட்டும் அரசு உள்நாட்டு சந்தையில் இருந்து ரூ. 1,000 பில்லியன் கடன்பெற்றுள்ளது. அதிலும் ரூ. 350 பில்லியன் ஓகஸ்ட் 28 மற்றும் 29 அன்றைய தினங்களில் பெறப்பட்டுள்ளது. கடைசியில் இந்த அரசு வாங்கும் கடன் எல்லாவற்றையும் எதிர்கால சந்ததியினர்தான் திருப்பிச் செலுத்தவேண்டியிருக்கும்” என்கிறார் பேராசிரியர் அத்துக்கோரள.

அவரைப் பொறுத்தவரையில் மக்கள் தங்களுடைய பெறுமதிமிக்க உடமைகளை அடகு வைப்பது நீண்டகாலத்தில் கடுமையான தாக்கங்களை - எதிர்விளைவுகளை - ஏற் படுத்தலாம். பொதுவாக, வளரும் நாடுகளில், மக்கள் பல்வேறு நோக்கங்களுக்காக தங்கத்தை வைத்திருக்கிறார்கள். உங்கள் சமூக நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது அதன் ஒரு குறிக்கோள். இலங்கை போன்ற நாடுகளில் நடுத்தர வர்க்கத்தினரால் இது செய்யப்படுகிறது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை எதிர்கொள்வதற்காகவே நடுத்தர வர்க்கத்தினர் தங்கத்தைச் சேகரிக்கிறார்கள். தங்களுடைய பிள்ளைகளுக்காக தங்கத்தை சேமித்து வைக்கிறார்கள். அவசரகாலத்தில் அதனையே உடனடியாகப் பணமாக மாற்றுகிறார்கள்.

ஏழை மக்கள், குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தினசரி கூலித் தொழிலாளர்கள் என்று வரும்போது, அவர்களிடம் இருந்த தங்கம் அவசரத் தேவைகளுக்கானது மட்டுமே.

தற்போது, நடுத்தர வர்க்கம் மற்றும் குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் இருவரும் தங்களுடைய தங்கத்தை முறையான மற்றும் முறைசாரா முறையில் அடகு வைக்கின்றனர். இப்போது அந்தத் தங்கத்தை மீட்டெடுப்பதற்கான வருமானம் அவர்களிடம் இல்லை. முன்னதாக, அவர்கள் பல்வேறு வழிகளில் வருமானம் ஈட்டினர், அதனால் அவர்களால் ஆண்டு அல்லது மாத இறுதியில் தங்கத்தை மீட்டெடுக்க முடிந்தது. ஆனால் அந்த உத்தி இனிச் செல்லாது. தற்போது அவர்களால் தமது தங்கத்தை மீட்டடுக்க முடியாத நிலையே ஏற்படுகின்றது.

இந்த நிலை அவர்களின் குழந்தைகளின் கல்வி, சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும். மற்றும் நாட்டில் வறுமையை அதிகரிப்பதற்கும் பங்களிக்கும். இது பலவழிகளில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தும் என பேராசிரியர் அத்துகோரள எச்சரிக்கிறார்.

அதேபோல், காணி மற்றும் சொத்து விற்பனை இப்போது வேகமாக மோசமடைந்துள்ளது. பலர் வெளிநாடு செல்வதற்காகத் தங்கள் நிலத்தை விற்கின்றனர் அல்லது பணத்திற்காக தங்கள் நிலத்தை அடமானம் வைக்க விரும்புகின்றனர். அதனால், சொத்து விலை வேகமாக குறைந்துள்ளது.

### கஷ்டப்படும் நடுத்தர வர்க்கம்

இதேவேளை, களனிப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத்துறை இணைப் பேராசிரியர் எச்.எம்.நவரத்ன பண்டாவும், குறைந்த வருமானம் மற்றும் உயர் வாழ்க்கைச் செலவு காரணமாக மக்கள் இவ்வாறு தமது உடைமைகளை அடமானம் வைக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிடுகிறார்.

பணவீக்கம் குறைந்துள்ளது என்று கூறப்பட்டாலும், சந்தையில் உள்ள பொருட்களைக் கருத்தில் கொள்ளும்போது அப்படித் தெரியவில்லை. வேறு வருமானம் இல்லாததாலும், வாங்கும் திறன் குறைந்துள்ளதாலும், மக்கள் தங்கம் மற்றும் பிற உடைமைகளை அடமானம் வைத்து பணத்தைத் தேட வேண்டிய நிலை உள்ளது, என்று அவர் கூறினார்.

தங்கள் உடைமைகளை அடமானம் வைத்து தங்களைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்றால், அவர்கள் இந்த உடைமைகளை மீட்க முயற்சிக்கும்போது, அவர்கள் மீண்டும் கடனாளியாகி விடுவார்கள் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர விலை மற்றும் ஊதியப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி நிரோா திஸாநாயக்கவோ, பணவீக்கம் குறைவது விலைகளைக் குறைக்கும் என்று அர்த்தப்படுத்தப்பட முடியாதது என்கிறார்.

பணவீக்கத்தைத் தணித்த போதிலும் விலைகள் கணிசமான குறைவைக் காட்டத் தவறியதைப் பற்றிக் குறிப்பிடுகையில், பணவீக்கத்தைப் பற்றி அறிவிக்கும்போது, பணவீக்கத்தின் வீழ்ச்சியை மட்டுமே நாங்கள் குறிப்பிடுகிறோம், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளின் குறைவை அல்ல. பணவீக்கம் என்பது விலைகள் அதிகரிக்கும் வேகத்தைக் குறிக்கிறது. இது பொருட்களின் விலை குறைப்பைக் குறிக்கவில்லை” என்கிறார் அவர்.

(மூலம்: தி மோர்னிங்)

காலைக்கதிர் Kalaikkathir



# திரிபோலி குழு தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு பிள்ளையான் அச்சுறுத்தல்

## சாணக்கியன் குற்றச்சாட்டு



திரிபோலி குழு தொடர்பில் பல விடயங்களை வெளிப்படுத்தும் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களை பிள்ளையான் அச்சுறுத்தியுள்ளார்.

இந்தகுழுவால்எனக்கும் ஏதும்பாதிப்புஏற்படுமாஎன்ற அச்சம் காணப்படுகிறது.நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெளிவற்ற வகையில் எம்மீது குற்றஞ்சாட்டுகிறார்.

எம்மை விமர்சிப்பதை விடுத்து வெளியாகியுள்ள விடயங்கள் குறித்து விசாரணை செய்யுங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை பொதுஜன பெரமுனவினர் தங்களின்ஆளணிபலத்துடன் தோற்கடிப்பார்கள். ஆனால் மக்கள் மத்தியில் செல்லும் போது நம்பிக்கையில்லா பிரேரணைக்கு அப்பாற்பட்ட வகையில்தகுந்தபாடத்தைக் கற்பிப்பார்கள் என்பதை பொதுஜன பெரமுனவினர் நினைவில்வைத்துக்கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த பிரத்தியேக மருத்துவ உபகரணத்தை முன்னாள் சுகாதார அமைச்சர் பவித்ராதேவி அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி களுத்துறை மாவட்டத்துக்கு வழங்கினார். இந்த முறையற்ற செயற்பாட்டின் சாபத்தால் அவர் அமைச்சு பதவியில் நீண்டகாலம் இருக்கவில்லை. நெருக்கடியான சூழ்நிலையில் பதவி விலகினார். தற்போது மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மீண்டும் அந்த மருத்துவ உபகரணத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளபோது அதைபதுளைமாவட்டத்துக்கு அனுப்பி வைக்க ஒரு தரப்பினர்முயற்சிக்கிறார்கள்.இந்த முறையற்ற செயற்பாட்டின் சாபமும் விட்டு வைக்காது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

சனல்4காணொளியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையே. குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஆராயாமல் தகவல்களைவெளிக்கொண்டுவரும் நபர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நான் ஆற்றிய உரை தொடர்பில் நீதியமைச்சர்விஜயதாஸராஜபக்ஷ வெள்ளிக்கிழமை உரையாற்றினார்.நான் எவற்றை குறிப்பிட்டேன் என்பதை அறியாமல் அவர் எனக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். தலைக்கான தொப்பியின் அளவுசரியாயின்நீதியமைச்சர் தொப்பியை அணிந்து கொள்ளலாம்.

பிள்ளையான்சிறையில் இருக்கும் போது அவரை விடுதலை முன்னாள்சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரி மாதவ தென்னகோன் ஆகியோர் இணக்கம் தெரிவிக்கவில்லை என்பதையே நான் குறிப்பிட்டேன். அத்துடன் பிள்ளையானின் விடுதலை தொடர்பில் வெளியாகியுள்ள குரல் பதிவுகள் தொடர்பில் சபைக்கு எடுத்துரைத்தேனே தவிர நீதிமன்றகட்டமைப்பை விமர்சிக்கவில்லை.ஆகவே நீதியமைச்சர் தெளிவுடன் செயற்பட வேண்டும்.

திரிபோலிஎன்றகொலை குழு 2015ஆம்ஆண்டுமுதல் இயங்குகிறது.மக்கள் மத்தியில்நல்லதொருநிலைப்பாடு இல்லாமல் இருந்த பிள்ளையானைமீண்டும்அரசியலுக்கு கொண்டு வருவதற்காகவே உயித்த ஞாயிறு தினத்தன்று மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. பிள்ளையான் தலைமையில்திரிபோலிகுழு செயற்படுகிறது.

திரிபோலி குழுவால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பலர் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் பலர் சாட்சியமளித்து பல விடயங்களைஎடுத்துரைத்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.2018ஆம் ஆண்டுஉள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு பின்னர் நட்டில் பலபகுதிகளில்முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. திரிபோலி குழுவுக்கும், இந்த முரண்பாடுகளுக்கும் இடையில் தொடர்புண்டு.

லசந்தவிக்கிரமதுங்க, ஹக்னெலி கொட, கீத்னொயார், தம்பையா, ஆகியோர் படுகொலைசெய்யப்பட்டமை குறித்து விசேட கவனம் செலுத்தவேண்டும்.திரிபோலி தொடர்பில்பலவிடயங்களை வெளிக்கொண்டு வரும் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களான சஷிந்திரன்புண்ணியமூர்த்தி, நிஷாந்தன், கிருாந்தன் ஆகியோர் இராஜாங்க அமைச்சர் பிள்ளையானால் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

திரிபோலி குழு ஊடாக எனக்கு ஏதும் பாதிப்பு ஏற்படுமா என்ற அச்சம் காணப்படுகிறது.கடந்தகாலங்களில் தேசிய பாதுகாப்பு என்று குறிப்பிட்டுக்கொண்டு கொழும்பில் ஒரு தரப்பினர் என்னைபின்தொடர்ந்தார்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் தற்போது வெளியாகியுள்ள பல விடயங்கள்குறித்துஇராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அமைதி காப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. - என்றார். (05)

# கல்விச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள ஈ.பி.எவ். நிதியத்தின் அரைவாசி தேவை

## அதன் பெறுமதி 2 ரில்லியன் ரூபாய் என்கிறார் சுரேன் ராகவன்

கல்வி சீர்திருத்தத்தை மேற்கொள்ள 2 ரில்லியன் ரூபாய்தேவைஎனமதிப்பிடப்பட்டுள்ளது. உயர்தரத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பல்கலைக்கழகத்திற்குஇணைத்துக்கொள்ளவேண்டுமாயின், ஆய்வு கூடங்கள், விடுதிகள் நிர்மாணிப்பது உள்ளிட்டபௌதிகவசதிகளை வழங்கவும் மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவதற்கும் இந்தப் பணம் தேவையாக இருக்கின்றது. இலங்கையின் மிகப்பெரும் நிதியம், சேமலாப நிதியம் ஆகும். முழுமையானகல்வி சீர்திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டுமாயின்அந்தநிதியத்தில் உள்ள தொகையில் சுமார் 50 சதவீதம் அளவில் நிதி தேவைப்படும்.

இவ்வாறு உயர் கல்வி இராஜாங்கஅமைச்சர்சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில்வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க நாட்டின் நெருக்கடி குறித்துக்கடந்தகாலங்களில் இரண்டு தலைப்புகளில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்து வருகின்றார். அதில் ஒன்று பொருளாதார மறுசீரமைப்பு. அடுத்தது, கல்விச் சீர்திருத்தம். ஏனெனில் கல்வியின்றி பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது என்பது அவருக்குத் தெரியும்.

ஓர் அறிவார்ந்த மனித வளத்தின் மூலமே உலகின் மாறிவரும் பொருளாதாரத்திற்கு ஏற்ற திட்டங்களை உருவாக்க முடியும். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல், கொவிட் நோய்த் தொற்று மற்றும் போராட்டம் காரணமாக, உயர்கல்விசில பின்னடைவுகளைச் சந்தித்தது. அவ்வாறு இருந்தாலும், இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து 63% மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். ஆனால் துரதிஷ்டவசமாக அத்தனை மாணவர்களையும் பல்கலைக் கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கு போதுமான பௌதிக வளம் எம்மிடம் இல்லை.

உலகத் தரத்தின்படி, ஒருபல்கலைக்கழகத்தில்பதினைந்து மாணவர்களுக்கு ஒரு விரிவுரையாளர் என்ற விகிதத்தில் கல்விக் கட்டமைப்பு இருக்கவேண்டும். ஆனால்நமதுநாட்டில்உள்ள அரசபல்கலைக்கழகங்களில் முப்பது மாணவர்களுக்கு ஒரு விரிவுரையாளர் மாத்திரமே இருக்கிறனர். உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், பௌதிக வளங்கள் மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவதற்கும் கல்வி சீர்திருத்தம் முன்மொழியப்படவேண்டும். உயர்தரத்தில் கல்வி கற்றும் மாணவர்களில் அதிகமானோர் கலைப் பிரிவில் கற்றுவருகின்றனர். இதற்குக் காரணம், இந்நாட்டில்உள்ள உயர்தரப் பாடசாலைகளில் பெரும்பாலான பாடசாலைகளில் கலைப் பிரிவு பாடங்கள் மாத்திரமே கற்றுக் கொடுக்கப்படுகின்றன. எனவே,பல்கலைக்கழகக்கல்விச் சீர்திருத்தத்தில், கலைப் பிரிவு படிக்கும் மாணவ, மாணவியரும் இளங்கலை விஞ்ஞானப் பட்டம் பெறும் வகையில் கல்விமுறை உருவாக்கப்படவேண்டும். உயர்தர விஞ்ஞானப் பாடங்கள் தொடர்பில் பாடசாலை ஆசிரியர்களுக்கு மேலதிகமாக தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் நேரத்தைப் பெற்றுக்கொள்ளும்வேலைத் திட்டமும் முன்மொழியப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது அதிகரித்துள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப பௌதிக மற்றும் மனித வளங்களை அதிகரிக்கக் கல்விசீர்திருத்தத்தில்கவனம் செலுத்தப்படவேண்டும். உயர்தரத்தில்சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பல்கலைக்கழகத்திற்கு இணைத்துக்கொள்ள வேண்டுமாயின், ஆய்வு கூடங்கள், விடுதிகள் நிர்மாணிப்பது உள்ளிட்ட பௌதிக வசதிகளை வழங்கவும் மற்றும் மனித வளங்களை மேம்படுத்துவதற்கும்இரண்டுரில்லியன் ரூபா தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மிகப் பெரும் நிதியம், சேமலாப நிதியம் ஆகும். முழுமையான கல்வி சீர்திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டுமாயின் அந்த நிதியத்தில் உள்ள தொகையில் சுமார் 50 சதவீதம் அளவில் நிதி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் நெருக்கடியில் உள்ள ஒரு நாடுதற்போது இவ்வாறான பெருந்தொகையை ஒதுக்குவது சாத்தியமற்றது என்ற வகையில், உயர் கல்விக்கான சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்போது பல்வேறு மாற்றுவழிகளைக்கையாள்வதுகுறித்துமுன்மொழிவுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

திறந்த பல்கலைக்கழகத்தை விரிவுபடுத்தல், தற்போதுள்ள பல்கலைக்கழகங்களில் மேலதிக வளாகங்களை உருவாக்குதல், தொழில்நுட்பம் சார் பாடநெறிகளைத் தொடங்குதல். அரச அனுமதி பெற்ற தனியார் பல்கலைக்கழகங்களில் (TOP UP Degree) பட்டங்களை வழங்குதல், தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்க வாய்ப்புகளை வழங்குதல், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் கிளைகளாக இந்நாட்டில் இயங்கிவரும் கல்வி நிறுவனங்களை கண்காணிப்புக்கு உட்படுத்தி மேம்படுத்தல் மற்றும் மெய்நிகர் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளது. அத்துடன், அவைமுறையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் உயர்தரத்தில் சித்திபெறும் அனைவரும் பட்டங்களைப் பெற்று தொழில் வாய்ப்புகளை இலகுவாக பெற்றுக்கொள்ளலாம்.

பல்கலைக்கழகங்கள் மூலம் உலகளாவிய பிரஜைகளை உருவாக்கும் சூழல் ஏற்படுத்தப்படவேண்டும். தற்போது தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கடன்வழங்கப்படுவதுபோல் அரசபல்கலைக்கழகங்களில் இணையும்மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படவேண்டும்.

அப்போது மாணவர்கள் தமக்கு அவசியமான பல்கலைக்கழகத்தைத் தெரிவு செய்வர். அவ்வாறு செய்யும்போது பல்கலைக் கழகங்களுக்கு இடையில் போட்டித்தன்மை ஏற்படும். அப்போது பல்கலைக் கழகங்களின் தரமும் உயர்வடையும்.இதன்படி,மாணவர்கள் தெரிவு செய்யும் பாடநெறிகளின் அடிப்படையில் இந்த உதவித்தொகை வழங்கப்பட வேண்டும். மேலும் அதனைக் கால அவகாசத்துடன்மீளப்பெறும் முறைமையொன்றும் தயாரிக்கப்படவேண்டும்.

இதன் மூலம் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் அதிகம் உள்ள பாடநெறிகளைத் தொடரும் ஆர்வமும் அதிகரிக்கும். இவ்வாறு பல்வேறு விடயங்கள் முன்மொழியப்பட்டிருந்தாலும் அவை முறையாக நடைமுறைப் படுத்தப்பட்டாலே எமது நாட்டின் உயர் கல்வி மேம்படும் - என்றார்.



# கிளிநொச்சியில் உள்ள தும்பு தொழிற்சாலையில் தீ விபத்து

கிளிநொச்சி பகுதியில் உள்ள தும்புத் தொழிற்சாலையில்வெள்ளிக்கிழமை நண்பகல்ஏற்பட்டதிடீர்தீயால் தொழிற்சாலைஎரிந்துநாசமாகியுள்ளது.

மேலும் இதன் காரணமாகதொழிற்சாலைவளாகத்திலுள்ளதென்னைமரங்களும், அருகிலுள்ள காணிகளில் உள்ளதென்னைமரங்களும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. சம்பவ இடத்துக்குச் சென்றதீயணைப்புபிரிவினர், இராணுவத்தினர், கிராம மக்கள்ஆகியோரின்துணையுடன்தற்காலிகமாக குறித்த தீகட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரப்பட்டது.

மேலும், கிராம குடியிருப்புகளுக்குள் தீ பரவாத வகையில் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும், குறித்ததும்புத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (05)



# இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்ட மாநாடு

## வவுனியா பல்கலையில் நடந்தது

இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திற்கான மாநாடும் பரிசளிப்பு விழாவின் இறுதி நிகழ்வும் வெள்ளிக்கிழமை வவுனியா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை வவுனியா பல்கலைக்கழகமும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டமும் இணைந்து எதிர்கால தலைவர்களை உருவாக்கும் நோக்கோடு உருவாக்கியுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் சாள்ஸ் கலந்து கொண்டிருந்ததோடுபல்வேறு துறைகளிலும்வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கிவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த கப் மோ.சைக்கிளை மோதி தள்ளியது

## பொலிஸ் கான்ஸ்டபிள் சம்பவ இடத்திலேயே சாவு

வவுனியா வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி சம்பவம் வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட -வீதி விளக்குவைத்த குளத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படிசம்பவம்தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

யாழில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற கப் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வவுனியாவில் இருந்து புளியங்குளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். குறித்த விபத்தில் கண்டியை சேர்ந்தவரும் புளியங்குளம் பொலிஸ்கான்ஸ்டபிளுமான 55 வயதுடைய கருணாதிலக்கஎன்பவரே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாற்றுத்திறனாளி நபர் கழுத்தறுத்து கொலை

## களுத்துறையில் சம்பவம்

செவிப்புலனற்ற மற்றும் பேச்சுத்திறன் குறைபாடுடையநபர்ஒருவர்கூரியஆயுதத்தால் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை சேரூபிட, கொலபகேவத்தையைச் சேர்ந்தடொனால்பியரத்னஎன்ற நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மது போதையில் இருந்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைசெய்யப்பட்டநபரிடம்சந்தேகநபர் பணத்தை கடனாகப் பெற்றுள்ளதாகவும் கடனாகக்கொடுத்தபணத்தைதிருப்பிக்கேட்கும் போது இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் களுத்துறைகுற்றத்தடுப்புபிரிவினர்விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் களுத்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)


JAFFNA'S FIRST HOUSING &
CONSTRUCTION EXHIBITION
JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys Aventura Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI Chamber of Construction Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
வீரகேசரி
Digital Media Partner
காலைக்கதிர் Kalaikkathir

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு கிழக்கில் தொல்லியல் திணைக்களத்துக்கூடாக பௌத்த மயமாக்கலை ராணுவமே செய்து வருகின்றது

## அருட்தந்தை மா.சக்திவேல் காட்டம்

வடக்கு கிழக்கில் தொல்லியல் திணைக்களத்திற்கூடாக நேரடியாக நில ஆக்கிரமிப்பு மற்றும் பௌத்தமயமாக்கலை இராணுவமே செய்து வருகிறது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

சமய தலைமைகள் தமது சமய உண்மையில் நின்று சமய அமைப்புக்கள் தந்துள்ள அதிகாரத்தையும், சமூக கௌரவத்தையும், பயன்படுத்தி சமூக நல்லிணக்கம் சமயங்களுக்கிடையிலான நல்லுறவு என்பவற்றை வளர்க்கவும், கட்சி அரசியலைக் கடந்து சமூக நீதிக்காக குரல் எழுப்பி சமூக சமத்துவத்துக்கு உழைக்க வேண்டும்.

அதனின்று விலகி அதிகார அரசியலுக்கு சாமரை வீசுவதும் இனமுரண்பாட்டை ஏற்படுத்துவதோடு சமூகத்துக்கு பேரழிவையே தருவிக்கும்.

அத்தோடு சமய தத்துவங்களையும் கொள்கைகளையும் அது அசிங்கப்படுத்துவதோடு இளம் தலைமுறை சமயத்தில் இருந்து விலக்கி அவர்களை அழிவிற்கே விட்டு செல்லும் அபாயமும் உள்ளது.

சில சிங்கள பௌத்த தலைமைகளின் ஆசியோடு வடகிழக்கில் தொல்லியல் திணைக்களத்திற்கூடாக நேரடியாக நில ஆக்கிரமிப்பு மற்றும் பௌத்தமயமாக்கலை இராணுவமே செய்வதோடு இராணுவத்தின் துணையோடும் துணை இன்றியும் சிங்கள பௌத்த துறவிகளும் அதனை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களையும் அரச துணை இராணுவ பிரிவாகவே அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.

இதற்குபின்னால்சிங்கள பௌத்த அரசியல் சதியே வடக்கு கிழக்கில் நிறைவேறி வருகின்றது. இதன் நோக்கம் சிங்கள பௌத்த மயமாக்கலோடு தமிழ் மக்கள் மீது அடக்கு முறையை பிரயோகித்து அவர்களை கொதிநிலையில் வைப்பதுமாகும். தேவை ஏற்படின் மோதலுக்கு வழிவகுப்பதுமாகும். இதனை அனைவரும் வன்மையாக கண்டிப்பதோடு அதற்கு தொடர்ந்து இடம் அளிக்கக்கூடாது.

அதேபோன்றுவேறுசமயமையங்கள்,சமயதலைமைத்துவங்களின் இனத்துவ, மத துவேச கருத்துக்களுக்கும், கட்சி அரசியலுக்கும் இடம் அளிப்பதை அங்கீகரிக்க முடியாது.

அண்மையில்கொழும்பு கத்தோலிக்க பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் இந்தியா தொடர்பாகவும், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தரைவழிப் பாதை தொடர்பாகவும் அவர் வெளியிட்ட கருத்து அவர் தமது கடந்த கால அரசியலுக்குள் இருந்து மீளவில்லை என்பதையே உணர்த்துகின்றது.

கடந்த காலங்களில் ராஜபக்ஷ அரசியலை பாதுகாத்தவர். அவர்களை மீளவும் அதிகாரத்துக்குக் கொண்டுவரத் துடித்தவர். தற்போது வேறு அரசியல் தளத்திற்கு தாவி அதனை பலப்படுத்தவும் அவர்களை அதிகாரத்திற்கு கொண்டுவர முயல்வதாகவுமே தோன்றுகின்றது.

கர்த்தினாலின் கருத்து இந்திய எதிர்ப்பு வாதத்தோடு சிங்கள பொது இனவாதிகளுக்குதீனிபோட்டுள்ளதோடு வரலாற்று பிறழ்வையும் கொண்டுள்ளது எனலாம்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும்இடையிலான தலைவழி பாதை அமைக்கும் முன்மொழிவை எதிர்க்கும் கர்தினால் அதற்கு தெற்கு மக்களின் விருப்பை கேட்க வேண்டும் என கூறுகின்றார்.

ஆனால் சீனா, இலங்கையின் சுற்றுச்சூழல் அழிவை ஏற்படுத்தி தனித்தீவை அமைத்து இருப்பதையோ, அம்பாந்தோட்டை துறைமுகத்தை தம் வசமாக்கத் துடிப்பதையோ, தமது இராணுவ ஆய்வு கப்பல்கள், நீர்மூழ்கி கப்பல்கள் என்பவற்றை இலங்கைக்கு அனுப்புவதையோ,இலங்கை கடலில்நங்கூரமிடுவதையோ எதிர்க்கவில்லை ஏன்?

இதற்கெல்லாம் சர்வஜன வாக்கெடுப்புநடத்திமக்களின் அபிப்பிராயத்தை அறியுமாறுகேட்கவில்லையேஏன்?

அது மட்டுமல்ல வடக்கில் தொடர்ந்து மற்றும் தொடரும் இன அழிப்பு இனப்படுகொலை கணாமலாக்கப்பட்டோர் கத்தோலிக்க அர்த்தம் தெரியாது காணாமலாக்கப்பட்டவை. நவாலி தேவாலயத்தின் மீது வான் படையினர் குண்டு தாக்குதல் நடத்தி அப்பாவிகள் கொல்லப்பட்டபோது வாயை திறக்கவில்லை. அவையெல்லாம் வடகிழக்கின் மறை மாவட்டங்களில் நடந்தன என அமைதி காத்து அங்கீகாரமும் அளித்தார். தற்போது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பாலம் அமைக்க உத்தேசித்திருப்பதன் மூலம் தமிழர்களுக்கு ஆகப்போவது ஒன்றும் இல்லை. ஆனால் 36 வருடங்களுக்கு முன்னர் இந்தியா வடக்கில் உணவு பொட்டலங்களை போட்ட நிகழ்வை நினைவுபடுத்தி பாரிய ஆபத்து என கொக்கரித்து சிங்கள பேரினவாதத்தை தூங்கா நிலைக்கு தள்ளியுள்ளார்.

இது அவரது தனிப்பட்ட அரசியல் லாப நோக்கு கருத்தாகும். தான் விரும்பும் அரசியல் சக்தியை அடுத்த தேர்தலில் பதவியில் அமர்த்துவதற்கான நச்சுக் கருத்து என்றே இதனைக் கூற வேண்டும்.

சமய தலைமைகள் எப்போதும் ஒடுக்கப்படும் மக்கள் சார்பெடுத்து, அவர்களின் குரலாக நின்று, அவர்களின் அவலம்போக்கிநீதியைநிலைநாட்ட முன் நிற்க வேண்டும். அதுவே விடுதலை சமய கருத்தியல். இதற்கு வாழ்வு கொடுப்பதே சமய கௌரவம்.

சமய தலைமைத்துவங்கள் தமது அடிப்படை வாதத்தினின்றும், குறுகிய அரசியல் வாதத்திலிருந்தும் விடுபட்டால்மட்டுமேநாட்டிற்கு எதிர்காலம் உண்டு. - என்றுள்ளது. (05)

# 6 கிலோ 'ஐஸ்' உடன் தமிழ்நாட்டில் பெண் உள்ளிட்ட நால்வர் கைது

இலங்கைக்குக் கடத்துவதற்காக இந்தியாவின் வேதாளை மீனவ கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருள்களுடன் பெண் ஒருவர் உட்பட நான்கு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்த இந்திய மதிப்பில் 6 கோடி ரூபா பெறுமதியான 6 கிலோ ஐஸ் போதைப்பொருள்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் சில இடங்களிலிருந்து அண்மைய காலமாக போதைப் பொருள்கள் அதிக அளவு கடத்தப்பட்டு வருகின்றன.

கடல் வழியாக நடைபெறும் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களை தடுக்க இந்திய மத்திய, மாநில உளவுத்துறை, மாவட்ட பொலிஸ், சுங்கத்துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை இந்தியாவிலுள்ள வேதாளை எம்ஜிஆர் நகரில் வசித்து வரும் சேதுராஜன் என்பவர் வீட்டில் இலங்கைக்கு கடத்துவதற்காக போதைப்பொருள் பதுக்கி வைத்திருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப்பெற்றது.

பொலிஸாருக்குகிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டிலிருந்து 6 கிலோ நிறையுடைய ஐஸ் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் குறித்த வீட்டின் உரிமையாளரும் உரிமையாளரின் உறவினர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் நடத்திய தொடர் விசாரணையில் ஐஸ் போதைப்பொருளை இவர்களுக்குச் சொந்தமான படகில் இலங்கைக்கு கடத்தி செல்ல முட்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அத்துடன் இந்த விசாரணையின் போது மேலும் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட ஐஸ் போதைப் பொருளின் பெறுமதி இந்திய மதிப்பில் 6 கோடி ரூபா ஆகும்.

இதேவேளை, ஐஸ் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் நான்கு பேர் கைது செய்யப்பட்டு அவர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லை வழியாக இருநாட்டு பாதுகாப்பையும் மீறி பல கோடி ரூபா மதிப்பிலான போதை பொருள்கள் இந்நாட்டு படகுகளில் தொடர்ந்து கடத்தப்பட்டு வரும் சம்பவம் பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)







# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை கட்சி ஒன்றின் முக்கியஸ்தரும் கைது

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வத்திராயன் பகுதியில் சுமார் 600 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்ற பொருள்கள் என்பன மருதங்கேணி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

மருதங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வத்திராயன் கிராமத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று இயங்கி வருவதாக மருதங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் வெள்ளிக்கிழமை இரவு குறித்த உற்பத்தி நிலையம் சுற்றி வளைக்கப்பட்டது.

இதன்போது மருதங்கேணி பொலிஸார் நான்கு கொள்கலன்களில் கோடா 600 லீற்றருக்கு மேற்பட்ட கசிப்பு வடிப்பதற்கு தேவையான கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் பொருள்கள் என்பனவற்றை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக மருதங்கேணி பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் கட்சி ஒன்றின் முக்கியஸ்தர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (05)

# மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமாகவே மக்களுக்கு நம்பிக்கையை உருவாக்கலாம்

## வேலுகுமார் தெரிவிப்பு



சுகாதாரத்துறை தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போயிருக்கிறது. அந்த நம்பிக்கையை ஏற்படுத்த சுகாதாரத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என எதிர்க் கட்சி உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான 3 ஆம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டின் சுகாதாரத் துறை மாத்திரமல்ல நாட்டின் எதிர்காலம் தொடர்பாகவும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அதனால்தான் அனைத்து துறைகளைச் சேர்ந்தவர்களும் நாட்டைவிட்டு வெளியேற முயற்சிக்கின்றனர்.

சுகாதாரத்துறையில் இடம்பெறும் திருட்டு, கொள்ளை, மோசடிகள் காரணமாகவே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டது.

குறிப்பாக கொவிட் தடுப்பூசியை பங்களாதேஷ் 5 டொலருக்கு பெறும் போது நாங்கள் 15 டொலருக்கு கொள்வனவு செய்தோம். அதே போன்று இன்சுலின் இறக்குமதிக்கு 1,56 டொலருக்கு விலைமனு கோரும் நிலையில் இந்த நடைமுறைக்கு வெளியில் சென்று அவசர இறக்குமதி என்ற பேரில் 4 டொலருக்கு இறக்குமதி செய்திருக்கிறது.

இந்த துறையில் மோசடி இடம்பெற்றிருப்பது இந்த ஓர் உதாரணம் போதுமானதாகும். இதனை யார் செய்தார்கள் என்பதை தேடிப்பார்த்து பதிலளிக்கவேண்டும்.

மேலும் மக்கள் இன்று பாரிய அசௌகரிங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கண் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு சென்றால், குருடாக்கி அனுப்புகிறார்கள்.

ஒரு சிறுநீரகத்தில் சிக்கல் இருப்பதாக வைத்தியசாலைக்கு சென்றால் இரண்டு சிறுநீரகங்களையும் எடுத்து விடுகிறார்கள். காய்ச்சலுக்கு மருந்து எடுக்க சென்றால் கையை வெட்டி விடுகிறார்கள். இந்த நிலைமையில் மக்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்லாமல் வீடுகளிலேயே இருந்து மரணிப்பது நல்லது என்ற நினைக்கும் வந்துள்ளனர்.

அதனால் மக்களுக்கு சுகாதாரத்துறை தொடர்பாகவும் இந்த அதிகாரிகள் தொடர்பாகவும் நம்பிக்கை இல்லை. அதனால் இதில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே மக்களுக்கு சுகாதாரத்துறை தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். அதனையே நாங்கள் கோருகிறோம்.

அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான வெளிப்படுத்தல்களை அரசாங்கம் திசை திருப்ப முயற்சிக்கிறது. அரசாங்கத்தில் இருக்கும் முஷாரப் எம்.பியும் இதற்கு துணைபோவது அவர் முஸ்லிம் சமுகத்துக்கு செய்யும் துரோகமாகும். - என்றார். (05)

# திருமதி உலக அழகி – 2022 சர்கம் கௌல வருகை!

திருமதி அழகி ஸ்ரீலங்கா - 2023 இன் இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக பங்கேற்பதற்காக இந்தியாவைச் சேர்ந்த திருமதி உலக அழகி - 2022 சர்கம் கௌல் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இந்தியாவின் மும்பையிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை சர்கம் கௌல் வந்தடைந்தார்.

திருமதி அழகி-ஸ்ரீலங்கா போட்டியின் தேசிய பணிப்பாளர் சந்திமால் ஜயசிங்க, தேசிய பயிற்சியாளர் ருக்மல் சேனாநாயக்க, திருமதி அழகி ஸ்ரீலங்கா போட்டி முகாமையாளர் நிமேஷ் பஸ்நாயக்க ஆகியோர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்று திருமதி உலக அழகி - 2022 சர்கம் கௌலை வரவேற்றனர்.

திருமதி அழகி ஸ்ரீலங்கா - 2023 இன் இறுதிப் போட்டி எதிர்வரும் புதன்கிழமை மாலை 06.00 மணிக்கு கொழும்பு தாமரைக் கோபுரத்தில் இடம்பெறவுள்ளதுடன் இதில் இலங்கையை சேர்ந்த 23 திருமணமான பெண்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த போட்டியில் பிரதம விருந்தினராக பங்கேற்றதன் பின் இலங்கையில் உள்ள சுற்றுலா தளங்களைப் பார்வையிடவுள்ள திருமதி உலக அழகி - 2022 சர்கம் கௌல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மீண்டும் இந்தியா திரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# குளவி கொட்டி 5 பேர் காயம்

யாழ் - பலாலி கிழக்கு பகுதியில் வெள்ளிக்கிழமை குளவி கொட்டுக்கு இலக்காகி ஐந்து பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய காயமடைந்த ஐவரும் சிகிச்சைக்காக அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலும் யாழ்ப்பாணத்தில் தற்போது கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவி வருவதால் மரங்களில் இருந்த குளவிக்கூடு கலைந்து குளவிகள் கூண்டில் இருந்து வெளியேறி தாக்கி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறமையும் குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# பெரும் போராட்டங்களை முன்னெடுத்து அரசாங்கத்தின் கொள்கைகளில் மாற்றத்தை கொண்டுவர முயற்சிப்போம்

## அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் போர்க்கொடி



வரவு செலவுத் திட்டத்தில் மாற்றம் வராவிட்டால் பல்கலைக்கழக ஆசிரியர்களும் தொழிற்சங்கங்களும் இணைந்து பாரிய போராட்டத்தை மேற்கொண்டு அரசாங்கத்தின் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வர முயற்சிப்போம் என அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் உப தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எங்களுடைய சாமானம் தற்போது இருக்கின்ற நாட்டினுடைய சூழல், பல்கலைக்கழக ஆசிரியர்களுடைய நிலைமை மற்றும் கல்வித் துறை சம்பந்தமானபலவிடயங்களைஆராய்ந்துதற்போது போராட்டம் ஒன்றை முன்னெடுக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கடந்த இரு வருடங்களாக இந்த பாரிய பொருளாதாரம் நெருக்கடியுடன் எங்களுடைய உறுப்பினர்களாக இருக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பல சிரமங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வரி பெருமளவில் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வேலை செய்யும் இடங்களில் போதிய அளவு வளங்கள் இல்லை. இதே நிலைமைதான் இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் முகம் கொடுக்கும் நிலைமையாக இருக்கிறது.

வாழ்க்கைச் செலவினுடைய அதிகரிப்பு வரிகளுடைய அதிகரிப்பு, இந்த நிலைமையில் அரசாங்கத்திடமிருந்து விதவிதமான உதவிகளும் காண முடியாத நிலை இருக்கிறது. எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் பாரிய மாற்றம் தேவை என்பது எங்களுடைய கருத்து. முக்கியமாக கல்வித்துறை சார்ந்த கொள்கைகளை எடுத்து பார்க்கின்ற போது பெரும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

பொருளாதார நிலைமை என்று பார்க்கின்ற போது மிகவும் குறைபாடாக இருக்கிறது, மக்களுடைய நிலைமையைக் கருதாமல் வெறுமனே சர்வதேச நாணய நிதியத்தினுடைய கொள்கைகளையும், அதனுடைய இலக்குகளையும்வைத்துக்கொண்டுதான் பொருளாதாரக் கொள்கைகளை அணுகிக் கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக மின்சாரம், எரிபொருள்கள் உடைய விலை அதிகரிப்பு மற்றும் அரசமைப்புகளை தனியார் மயமாக்கும் நிலைப்பாடு வரவு - செலவு திட்டத்தில் ஒரு சிக்கன அடிப்படையில் செலவுகளை குறைத்து பொது சேவைகளை சீர்குலைக்கும் நிலைமை தற்போது காணப்படுகிறது.

தற்போதைய நிலைமைகள் முக்கியமான விடயம் இரண்டு மாதத்திற்கு முன்பு உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்கின்ற கொள்கையை மத்திய வங்கியால் முன் வைக்கப்பட்டு அரசாங்கமும் ஏற்றுக் கொண்டிருக்கிறது, அதன் அடிப்படையில் மக்களினுடைய ஈ.ரி.எவ். நிதி அடுத்த 16 வருடங்களில் ஏறத்தாழ 47 விகிதத்தால் குறையப் போகின்றது, இது மிகவும் ஒரு பின்னடைவாக இருக்கும். எங்களுடைய பல்கலைக்கழக ஆசிரியர்களுடைய ஈ.பி.எப் கூட 40 விகிதத்தால் குறைய கூடிய வாய்ப்பு உண்டு.

இவைகள்எங்களுடையஅரசாங்கத்தினுடையகொள்கைகளை கேள்விக்கு உட்படுத்தும் ஒரு விடயமாக இருக்கின்றன. இதற்கு எதிராகவும் எங்களுடைய அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் ஏனைய தொழிற் சங்கங்களுடன் இணைந்து கடைசி சில வாரங்களாக சில போராட்டங்களை கொழும்பில் மேற்கொண்டு இருக்கிறது.

கடந்த ஐந்து வருட காலத்திலும் எங்களுடைய மாணவர்களுடைய உள்வாங்கும் தொகை 29,000 தொடக்கம் 43000 ஆக அதிகரித்திருக்கிறது, அதாவது ஏறத்தாழ 50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த 17 பல்கலைக்கழகங்களுக்கான அரசாங்கத்தினுடைய முதலீட்டு செலவு 0.16-0.08 விகிதமாக 50 விகிதத்தால் குறைக்கப்பட்டிருக்கிறது.

அதாவது மாணவர்களுடைய தொகை 50 வீதம் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது ஆனால் பல்கலைக்கழகங்களுடைய முதலீட்டு செலவிற்கான ஒதுக்கீடு 50 வீதம் குறைக்கப்பட்டிருக்கிறது, இவ்வாறான கொள்கைகளை தான் இந்த அரசாங்கம் முன்கொண்டு போகிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் பெரும் மாற்றம் வராவிட்டால் பல்கலைக்கழக ஆசிரியர்களும் தொழிற்சங்கங்களும் இணைந்து ஒரு பாரிய போராட்டத்தை மேற்கொண்டு கொள்கைகளில் மாற்றம் கொண்டு வர முயற்சிப்போம் என்பதை தெரியப்படுத்துகின்றோம் எனத் தெரிவித்துள்ளார். (05)

## வெளிநாட்ட.....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

இந்த வைத்தியசாலையே உதாரணமாகும்.

எமது சுகாதாரக் கொள்கை தொடர்பில் நாம் மீளச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்நாட்டில் வைத்தியசாலைக்கட்டமைப்பு அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகள் என பிளவுபட்டுகாணப்படுகின்றன. பெருமளவானவைத்தியர்கள் நாட்டைவிட்டுச்செல்கிறார்கள்.

அதனால் நாட்டிற்குள் அதிகளவில்வைத்தியர்களை உருவாக்கவேண்டியுள்ளது. அதற்கமைய முதலாவது அரச சார்பற்ற வைத்திய பீடத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளோம்.

தெற்காசியாவின் தொழில்நுட்ப நிறுவனமான சைட்டமை மொறட்டுவ வைத்தியசாலைக்கு கையளித்துள்ளோம். அதேபோல்இன்னும் பல மருத்துவ பல்கலைக்கழகங்களைநாட்டில் தொடங்க முடியும் என நம்புகிறோம். வைத்தியர்களை அதிகளவில் உருவாக்குவதற்கு அதனை தவிர மாற்று வழிகள் எவையும் இல்லை.

இலங்கைவைத்தியர்கள் இல்லாமல்ஐக்கியஇராச்சியம் தனதுவைத்தியசாலைகளை நடத்திச் செல்வதில் நெருக்கடியை எதிர்கொள்கிறது. அதனால் பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இந்தியாவுடன் சேர்ந்து, ஐக்கிய இராச்சியத்தின் வைத்தியசாலை கட்டமைப்பைநாமும்நடத்திச் செல்கிறோம்என்றுகூறினால் தவறாகாது.

உதவி பெறும் நாடாக மட்டுமன்றி, உதவிவழங்கும் நாடாகவும் இலங்கை மாற வேண்டும். மேலும், அரச மற்றும் தனியார் துறைகள் இணைந்து செயற்படுவதற்கான செயற்றிட்டங்களை நாம் தயாரித்துள்ளோம்.

ஆளும்தரப்பால்நாட்டின் குடிமக்களுக்கு மருத்துவக் காப்புறுதி பெற்றுக்கொடுக்கப் படவுள்ளது. அப்போது சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலைக்குச் செல்வதா அரச வைத்தியசாலையை நாடுவதா என்பதை மக்கள் தீர்மானிப்பர்.

இந்த நாட்களில் நானும் ஒரு வைத்தியரை போலவே செயற்படுகிறேன். இறப்பின் இறுதி தருவாயிலிருக்கும் நோயாளியை சுமந்துச் செல்லும் அதேநேரம் அவருக்கு சிகிச்சையளித்து காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன்.

திறந்த பொருளாதார கட்டமைப்பின் கீழ் நாடு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அதனால் தனியார் நிறுவனங்களும் அபிவிருத்தி அடையலாம். அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டுக்கு முன்னேற்றம் கிட்டாது.

அதன்படி இலங்கையில் தேயிலை செய்கைக்கு அப்பால் சென்ற ஒருவராக ஜோசப் பிரேசரை கூறலாம். இலங்கையில் கோப்பிக்கான கேள்வி குறைந்து, தேயிலைசெய்கை அதிகரித்த காலத்தில் அவரும் முன்னேறி நாட்டிற்கும் ஒரு வைத்தியசாலையை விட்டுச் சென்றுள்ளார். தற்காலத்தில் சுமல் பெரேரா போன்றவர்களுடன் இணைந்துஇந்தத்துறையை முன்னோக்கி கொண்டு செல்லவேண்டும் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




## நாடாளுமன்றச் செயற்பாடு பற்றிய குறுங்காலப் பயிற்சி







இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் விஞ்ஞானத்துறை, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நாடாளுமன்றத்துடன் இணைந்து பல்கலைக்கழக உள்வாரி இளங்கலைப்பட்டதாரி மாணவர்களுக்கான அரசியல் செயற்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் பற்றிய குறுங்காலக் கற்கைநெறி நாடாளுமன்ற செயற்பாடுகளும் நேற்று (சனிக்கிழமை) தொடக்கம் இன்று(ஞாயிற்றுக்கிழமை) வரை கலை கலாசார பீடத்தின் கேட்போர் கூடத்தில்நடைபெறஉள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரபீடத்தின்விஞ்ஞானத் துறை தலைவர் கலாநிதி எம். அப்துல் ஜப்பாரின் நெறிப்படுத்திலில் நடைபெறும் நாடாளுமன்ற செயற்பாடுகளும் ஒழுங்கு முறைகளும் பற்றிய குறுங்காலக் கற்கைநெறி அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற மக்கள் தொடர்பு அதிகாரி ஜெஸ்ரி முஹம்மட் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் விளக்கமளித்தார். மேலும் நாடாளுமன்ற நிர்வாக பணிப்பாளர்ஜி.தட்சனாராணி நாடாளுமன்றம் மற்றும் ஜனநாயகம் தொடர்பிலும், நாடாளுமன்ற நடைமுறை மற்றும் நாடாளுமன்றத்தின் அலுவல் ஒழுங்கு தொடர்பிலும், பிரதிநிதித்துவத்தில் நாடாளுமன்றத்தின் முக்கியத்துவம் தொடர்பில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் ஆகியோர் விளக்கமளித்தனர்.

'நாடாளுமன்ற ஜனநாயகம் ஒரு கண்ணோட்டம்' விரிவுரையை இரண்டாம் நாளான இன்று (ஞாயிற்றுக்கிழமை) தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் விஞ்ஞானத் துறை தலைவர் கலாநிதி எம். அப்துல் ஜப்பார் நிகழ்த்த உள்ளதுடன், இலங்கை நாடாளுமன்றத்துக்கான டிஜிற்றல் அணுகுமுறை தொடர்பில் நாடாளுமன்ற மக்கள் தொடர்பு அதிகாரி ஜெஸ்ரி முஹம்மட் நிகழ்த்த உள்ளார், மேலும் இலங்கையில் சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் நாடாளுமன்றத்தின் ஆவண அமைப்பு தொடர்பில் நாடாளுமன்ற நூலகர் எஸ்.எல். சியாத் அஹமட் மற்றும் சமூக ஊடகம் மற்றும் நாடாளுமன்ற ஜனநாயகம் தொடர்பில் நாடாளுமன்றஊடகஅதிகாரி நுஸ்கி முக்தார் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் எம்.ட. அஸ்ஹர், துறை தலைவர்கள், விரிவுரையாளர்கள், நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.09.2023இல் வெளியிடப்பெற்றது.